# சட்டமும் நீங்களும்

# (LAW AND YOU)

## 11

### குடியியல் சட்ட விளக்கங்கள்

### Understanding the Civil Laws


**தொகுப்பாக்கம்:**

**K.G. John**

**ATTORNEY-AT-LAW**



**இலவச வெளியீடு:**

**மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,**
**இல: 238, உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

# முன்னுரை

''சட்டமும் நீங்களும்'' எனும் 9ஆம்,10ஆம் புத்தகங்கள் ஏற்கனவே வெளியாகி வாசகர்களின் கைகளில் உலவி வருகின்றது. வாசகர்கள் இச்சிறு கைநூல்களில் காட்டும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் CPPHR மிகவும் வரவேற்கின்றது. இனி தொடர்ந்து வெளிவரவிருக்கும் இவ்வருடத்திற்குரிய கைநூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவியை வழங்கிக் கொண்டிருக்கும் USAid – SPICE நிறுவனத்திற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடம் ''சட்டமும் நீங்களும்'' என்ற கைநூல்கள் குடியியல், குற்றவியல் பற்றிய சில கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவரவுள்ளன. அதனுடைய முழுநோக்கமும் பொதுமக்களிடையே சட்டஅறிவையும் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துவதேயாகும்.
இவ்வருட கைநூல்களில் வெளிவரவுள்ள ஆக்கங்களை தொடர்ந்தும் சட்டத்தரணி K.G.John அவர்கள் வழங்க உள்ளார். சட்டத்தரணி K.G.John அவர்கள் வீரகேசரி பத்திரிகையின் வாசகர்களுக்கு புதியவர் அல்ல. சட்டம் பற்றிய அவருடைய கருத்துக்கள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் வீரகேசரி பத்திரிகையில் வெளிவருகின்றன.

அக்கட்டுரைகளை தொகுத்து கைநூல் வடிவமைப்பில் வெளியிடுவதற்கு அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கிய சட்டத்தரணி K.G.John அவர்களுக்கு CPPHR தன்னுடைய முழு நன்றியையும் கூறுகின்றது. பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள் நாளடைவில் வாசகர்களின் கையிலிருந்து நழுவிப் போவது சகஜமே. எனவே கட்டுரை ஆசிரியரின் நோக்கத்தையும் கருத்திலெடுத்து கைநூல் வடிவில் வடிவமைத்து வாசகர்கள் நீண்ட தூரப்பயனடைவதற்கு எம்முயற்சி வழிவகுக்கும் என நம்புகின்றோம். விஷேட விதமாக வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் தன்னுடைய பத்திரிகையின் ஊடாக சட்டத்தரணி K.G.John அவர்களுடைய ஆக்கங்களை வெளியிட்டு பொது மக்களுக்கு விலைமதிக்க முடியாத சேவையினை ஆற்றுகின்றமைக்கு CPPHR தன்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இக்கைநூல்கள் ஆர்வம் மிக்க வாசகர்களுக்கும் பொது நல சேவையாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவைகள் நூலகங்கள், சட்டமாணவர்கள், சட்டவிழிப்புணர்வுகளை கொண்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவைபோன்று பொதுநல எண்ணக்கருத்துக்களை கொண்ட நிறுவனங்களையும் வாசகர்களையும் சென்றடைவதே எமது நோக்கமாகும்.

இக்கைநூல்கள் கிடைக்கும் இடம்:- மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல. 238, உட்துறைமுக வீதி, திருகோணமலை.
தொலைபேசி எண்: 026-3260895.
E-mail: cpphrtrinco@gmail.com.

**''அறிவு உன்னை விடுவிக்கும்''**

# Foreward

Already "Law & You" booklets Nos. 9 and 10 had been released and it is in circulation.

CPPHR is appreciative for the support and enthusiasm shown by the readers of "Law & You". The grant has been approved by USAid – SPICE to continue the publication of the next series.

The aim is to enhance awareness and knowledge of law among people.

Mr. K.G. John will continue to contribute in the writing of articles pertaining to criminal and civil laws.
Mr. K.G.John, Attorney – at – Law is the author for this series. Mr. K.G. John is well known among the readers of Virakesari, the Tamil daily News Paper. His articles on law features on Wednesdays in the Virakesari.

CPPHR is ever grateful to Mr.K.G. John for his full support in granting permission to bring in his articles in booklet forms which have already been published. Since, the news paper articles usually tend to get lost easily, the booklet form will be much more effective to carry foreward the intention of the author. CPPHR appreciates the Editor, Virakesary who had been providing this valuable service to the public.

These booklets will be distributed free of charge to all who are interested. It will reach libraries, law students, NGOs working in law awareness programmes and like minded organizations etc.

The booklets will be available at,
Centre for Promotion & Protection of Human Rights, 238, Inner Harbour Road, Trincomalee.
Phone No. 026-3260895. E-mail: cpphrtrinco@gmail.com.

**"knowledge sets you Free"**

## பொருளடக்கம்

1. ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமான தகராறு

2. அட்டோனி தத்துவப் பத்திரத்தை நீதிமன்றம் ஏற்க வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?

3. முன் தீர்ப்பத்தடை எனும் “றெஸ் ஜூடிகாட்டா” சட்ட விதி பிரிவிடல் வழக்குக்கு செல்லாதது ஏன்?

4. கொடை அளிக்கப்பட்ட காணி ஒன்றை கொடை அளித்தவர் மீளப் பெறலாமா?

# 01

## ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமான தகராறு

சட்டம் பற்றி சாதாரண அறிவு அற்ற பாமர மக்கள் கூட கதைத்துக் கொள்ளும் ஒரு விடயம் 66ஆம் பிரிவின் கீழ் தமது காணி பற்றி வழக்குத் கொடுக்க வேண்டும் என்பதாகும். இவ்வழக்கு இன்று இலங்கையில் பிரபல்யம் பெற்று விளங்குவது இதனாலேயேயாகும்.

ஆகவே இவ்வழக்கு சனப்பிரிய வழக்கு என்று கூறினாலும் சிலரைப் பொறுத்த வரை விருப்பமற்ற வழக்கு என்ற விமர்சனத்துக்கும் உள்ளாகும் வழக்காகும். ஆகவே இவ்வழக்கைப் பற்றி ஓரளவு அறிந்திருப்பது சாலச் சிறந்தது எனலாம்.

பலர் இவ்வழக்கின் கீழ் பெறக் கூடிய நன்மை என்ன என்பதை அறியாதிருப்பதுடன் அவர்களது எண்ணத்தில் இந்தப் பிரிவின் கீழ் தொடரும் வழக்கில் காணி நிலம் சம்பந்தமாக சகல பிரச்சினைகளுக்கும் முடிவு காணலாம் என்பதாகும்.

ஆனால் உண்மை அதுவல்ல. சட்டத்தின் ஏற்பாடுகளை பார்க்கும் போது அவர்களது எண்ணம் தவறானது என்பதைக் காணலாம். அளவில்லாத பணத்தை விரயம் செய்து பெறப்படும் தீர்ப்பானது சக்தியில்லாதது என்பதை இவ்வழக்கை தொடர்ந்து நடைபெறும் வழக்குகளின் தீர்ப்பில் இருந்து தெரிந்து கொள்ளும் போது பலர் மன விரக்தியடைவதும் உண்டு.

ஆயினும் அவசர நிலையில் இதைத் தவிர வேறு வழியில்லாததால் அவ்வழக்குக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. முக்கியமும் பெறுகிறது.

## இந்த வழக்குப் பற்றி அறிய வேண்டிய முக்கிய விடயம்

1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 7 ஆம் அத்தியாயத்தின் கீழ் 66 ஆம் பிரிவு தொடங்கி 75 ஆம் பிரிவு வரையுள்ள பகுதிகளில் கூறப்பட்டுள்ளது என்னவெனில் காணி நிலம் சம்பந்தமாக ஏற்படுகின்ற தகராறினால் சமாதானம் குலைய அல்லது சமாதானம் குலையக் கூடிய சூழ்நிலை ஒன்று தோன்றும் போது தகராறுக்குள்ளானவர்கள் மேற்படி ஆரம்ப நீதிமன்றத்தின் பிரிவுகளின் படி நிவாரணம் பெறலாம் என்பதேயாகும்.

மேற்படி சட்டத்தின் 75 ஆம் பிரிவின் படி நிலம் சம்பந்தமான தகராறு என்பது நிலம் அல்லது நிலத்தின் ஒரு பகுதியின் உடமை யாருக்குரியது என்ற பிரச்சினை, அங்குள்ள கட்டிடம், அந்தக் காணியின் எல்லைகள் சம்பந்தமான பிரச்சினை, அந்நிலத்தில் அல்லது அந்நிலத்தில் பயிர் செய்யும் உரிமை யாருக்குள்ளது என்ற வினா எழும் போதும் சேவக உரிமை மற்றும் அதனை ஒத்த உரிமைகளும் அடங்கும் போதும் எழுகின்ற தகராறுகளையே அது குறிக்கிறது என்பதாகும்.

1973 ஆம் ஆண்டு நீதி நிருவாகச் சட்டத்தின் 44 ஆம் இலக்க சட்டத்தின் 62,63,65 என்ற பிரிவுகளின் கீழ் இருந்த "நிலம் சம்பந்தமான தகராறு" என்ற விடயம் அப்படியே ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அதற்குரிய நீதிமன்ற அதிகாரத்தை ஆரம்ப நீதிபதிகளுக்கு வழங்கியுள்ளது.

வாசகர்கள் விளங்கிக் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் 66 ஆம் பிரிவின் கீழ் தொடரப்படும் வழக்குகளின் தீர்ப்புக்கள் மூலம் பாராளுமன்றம் எதிர்பார்ப்பது என்னவெனில் நிலத் தகராறு காரணமாக எழும் சமாதான

குலைவு அல்லது சமாதானத்தைக் குலைக்கின்ற நிலையை தவிர்க்க வேண்டும் என்பதாகும்.

இதனைச் செய்வதற்கு ஆரம்ப நீதிமன்றம் இடும் கட்டளையானது கட்சிக்காரர்கள்(தகராறுக்கு உள்ளானவர்கள்) உரிய நீதிமன்றத்திற்கு சென்று வழக்கைத் தொடர்ந்து உண்மையான தீர்வையைப் பெறும் வரையும் ஆரம்ப நீதிமன்ற தீர்ப்பு ஒரு தடையாணை போல் விளங்க வேண்டும் என்பதாகும். இது இறுதித் தீர்ப்பு அல்ல.

ஆரம்ப நீதிமன்ற கட்டளையின்படி எந்த ஒரு கட்சிக்காரரின் சிவில் உரிமை அதாவது உரித்து அல்லது உடமை அல்லது சேவகம் அல்லது அதனை ஒத்த வேறு உரிமைகள் பாதிக்கப்படுவதில்லை என்றும் கட்சிக்காரர்கள் தகராறுக்குரிய நிலம் சம்பந்தமான உரிமையை பெறுவதற்கு உரிய நீதிமன்றத்திற்கு செல்வது தடுக்கப்படுவதில்லை என்பதாகும்.

உதாரணமாக ஆரம்ப நீதிமன்ற கட்டளையின்படி உடமை (Possession) வழங்கப்பட்ட ஒருவருக்கு உரித்து (Title) இல்லை என்று எடுப்போம். ஆகவே உரித்துள்ளவர் மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று உரித்து நிறுவல் (Reivindicatio) வழக்கை தாக்கல் செய்து தமது உரித்தை நிலை நாட்டத் தடையில்லை என்பதாகும். ஆகவே, ஆரம்ப நீதிமன்றக் கட்டளையானது சமாதான குலைவு அல்லது சமாதானக் குலைவை ஏற்படுத்துவதை தவிர்ப்பதே தவிர வேறு உரிமையை நிலைநாட்டுவதல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## ஆரம்ப நீதிமன்றத்தில் 66 ஆம் பிரிவின் கீழ் வழக்கு ஒன்று எவ்வாறு நடைபெறுகிறது?

66 (1) ஆம் உப பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ளதாவது,

சமாதானத்திற்குக் குலைவு ஏற்படும் போது அல்லது சமாதானத்திற்கான குலைவு ஏற்படும் சூழ்நிலை தோன்றும் போது பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(அ) தகராறைப் பற்றி விசாரணை செய்கின்ற பொலிஸ் அதிகாரி இயன்றளவு விரைவாக தகராறுக்குட்பட்ட காணி அமைந்துள்ள இடத்தின் நீதிமன்றத்திற்கு தகவல் சமர்ப்பிக்க வேண்டும். அதே போல் தகராறு உள்ள கட்கிக்காரரை தகவல் சமர்ப்பித்த பின்னரான முதலாவது வேலை நாளில் நீதிமன்றத்திற்கு சமூகங்கொடுக்கும்படி கேட்க வேண்டும். அல்லது,

(ஆ) சமாதானத்தை நிலை நாட்ட தகராறு புரிபவர்களை கைது செய்து நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து ஒப்படைப்பதுடன் தகராறுக்கு காரணமான தகவலை நீதிமன்றத்திற்கு வழங்கி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்க வேண்டும். அல்லது,

(இ) அந்தத் தகராறுக்கு காரணமான மறு பகுதியாரை பொறுப்பாளியாக்கி நீதிமன்றத்திற்கு தகராறுக்கு காரணமான தகவலை விளக்கி சத்தியக் கடதாசி மூலம் வழக்கைப் பாரப்படுத்த வேண்டும். அத்துடன் அதற்குரிய நிவாரணங்களையும் குறிப்பிட வேண்டும். அப்படிச் செய்யும் போது நீதிமன்றம் பதிவுத் தபாலில் அல்லது சாதாரண தபாலில் ஒரு திகதியையிட்டு கட்சிக்காரருக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் நோட்டீஸ் தகவல் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் இருக்க வேண்டும்.

மேலே கூறியவாறு தகவல் நீதிமன்றத்திற்கு கிடைத்தவுடன் ஆரம்ப நீதிமன்ற நீதிபதிக்கு அத்தகராறு சம்பந்தமான விசாரணையை தொடர்ச்சி தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் அதற்குரிய நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டுமென்றும்

ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66(3)லிருந்து 66(8) வரையுள்ள பகுதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

66(3) ஆம் பிரிவின் படி கட்சிக்காரரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய திகதியிலிருந்து அல்லது அவர்களை நீதிமன்றத்தால் அழைத்து அவர்கள் சமூகங்கொடுத்த திகதியிலிருந்து 14 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்குள் தகராறுக்குள்ளானவர்களின் உரிமையை எடுத்துக் காட்டும் ஆவணங்களையும் வேறும் அவர்கள் தமது உரிமையை நிலை நாட்டும் ஆவணங்களையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் படி கட்டளையிட வேண்டும்.

66(4) தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைத்த தினத்தில் இருந்து ஒரு வாரத்திற்கு மேற்படாத காலத்திற்குள் அந்தத் தகராறுக்கு காரணமாகவுள்ள காணியின் ஒரு துலாம்பரமான இடத்தில் எல்லோருக்கும் தெரியக் கூடியவாறு ஒரு அறிவித்தலை ஒட்ட வேண்டும். அவ் அறிவித்தலில் பின்வருமாறு கூறப்பட்டிருக்க வேண்டும். "மேற்படி காணி சம்பந்தமாக தகராறு உள்ளது என்றும் மேற்படி காணியில் உரிமைக் கோரிக்கை வைப்பவர்கள் கரிசனையுள்ளவர்கள் யாராயினும் இருப்பின் அவர்கள் இவ் அறிவித்தலில் உள்ள தினத்தன்று நீதிமன்றத்தில் தோன்றும் படியும் கேட்க வேண்டும்".

மேலும் பொலிஸ் அதிகாரியின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பின் அத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடம் அவர்களது உரிமையை ஏற்க வேண்டுமென்று கூறுவதற்கு ஆதாரமான ஆவணங்களையும் அவற்றை உறுதி செய்யும் சத்தியக் கடதாசியையும் சமர்ப்பிக்குமாறு கேட்க வேண்டும்.

66(5) ஆம் பிரிவின்படி கட்சிக்காரர்கள் தத்தமது உரிமைகளை நிலைநாட்டும் ஆவணங்களையும் சத்தியக் கடதாசிகளையும்

சமர்ப்பித்ததன் பின்னர் அவற்றுக்கு மறுப்புத் தெரிவிக்கும் சத்தியக் கடதாசியை சமர்ப்பிக்கும் உரிமையை ஏனைய கட்சிக்காரர்களுக்கு வழங்க வேண்டும். மறுப்புத் தெரிவிப்பவர்கள் தமது மறுப்பு தெரிவிக்கும் சத்தியக் கடதாசியை இரண்டு வாரங்களுக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்க வேண்டும்.

இவ்விடத்தில் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் தகராறுக்கு உள்ளானவர்களால் சமர்ப்பிக்கப்படும் சத்தியக் கடதாசிகளையும் ஆவணங்களையும் மாற்றுக் கட்சிக்காரர் பரிசீலிக்கலாம். இதனை நீதிமன்ற பதிவாளரிடம் அனுமதி பெற்று பரிசீலிக்கலாம். அவர்களது சட்டத்தரணிகளும் பரிசீலிக்கலாம். நீதிமன்ற பதிவாளர் இதற்கு அனுமதி வழங்குவார் என்பதாகும்.

66(6) ஆம் பிரிவின்படி மேற்படி தகராறுகாரர்களினதும் அக்காணியில் கரிசனை உள்ளவர்களதும் ஆவணங்களையும் சத்தியக் கடதாசிகளையும் பெற்றதன் பின்னர் அதற்குரிய விசாரணையை தொடங்குவதற்கு முன்னர் ஆரம்ப நீதிமன்ற நீதிவான் அவ்விடத்தில் உள்ள சகலரையும் அழைத்து அத்தகராறை சமாதானமாகத் தீர்க்க தமது ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். சமாதானமாக தீர்க்க முடிந்தால் எல்லோரதும் ஒத்துழைப்பையும் பெற்று சமாதானத் தீர்வை உள்ளடக்கி நீதிமன்றத் தீர்ப்பை வழங்க வேண்டும்.

66(7) ஆம் பிரிவின் படி மேற்படி 66(6) ஆம் பிரிவின் கீழ் சமாதானமாக தகராறு தீர்க்க முடியா விட்டால் தகராறை விசாரணை செய்ய திகதி குறிப்பிடப்பட வேண்டும். இந்தத் திகதி சத்தியக் கடதாசி, எதிர் சத்தியக் கடதாசி ஆகியவை சமர்ப்பிக்கப்படும் திகதியில் இருந்து இரண்டு வார காலத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

66(8) ஆம் பிரிவு மிக முக்கியமான பிரிவாகும். இப்பிரிவின் கீழ் உள்ள விதிகளுக்கமைய கட்சிக்காரர்கள்

செயல்படாவிட்டால் அவர்கள் எந்த நிவாரணத்தையும் பெற முடியாது. ஆகவே அவ்விதிகள் எவை எனப் பார்ப்போம்.

1) தகராறுக்குள்ளானவர்கள் கட்டாயம் நீதிமன்றத்தில் தெரிபட வேண்டும். சட்டத்தரணிகளின் உதவியையும் அவர்கள் பெறலாம்.

2) நீதிமன்றத்தில் தெரிபட்டால் மட்டும் போதாது தங்களது உரிமைக்கான சத்தியக் கடதாசியைக் கட்டாயம் அணைக்க வேண்டும். ஏனெனில் 66(8)ஆம் (ஆ) பிரிவின்படி கட்சிக்காரர் நீதிமன்றத்தில் தோன்றாதிருந்தால் அல்லது தோன்றி சத்தியக் கடதாசி ஆவணங்களை முன் வைக்காமல் இருந்தால் அவர் அந்தத் தகராறு சம்பந்தமாக நீதிமன்றில் தெரிபடவில்லை என்றே கொள்ளப்படுவதாலாகும். இத்தகையவர் வழக்கு விசாரணையில் ஈடுபட முடியாது.

ஆகவே, 66 ஆம் பிரிவின் கீழ் தொடரப்படும் வழக்கில் சத்தியக்கடதாசி அணைத்தல் மிக அவசியமானது. சத்தியக் கடதாசியைத் தவிர வேறு வழியில் ஒருவர் தனது உரிமையை நிலை நாட்ட முடியாது.

**தீர்ப்பு எப்படி இருக்க வேண்டும்? இது பற்றி 68,69 ஆம் பிரிவுகளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.**

68 (1) ஆம் பிரிவின் படி காணி அல்லது அதன் ஒரு பகுதியின் உடமை பற்றி பொலிஸார் 66 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்கும் தினத்தில் தகராறுக்குள்ளான காணியில் அல்லது அதன் பகுதியில் உடமை செய்ய உரிமையுள்ளவர் யார் எனத் தீர்மானிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தின் பின்னர் அத்தகைய ஆளுக்கு அக்காணியில் உடமை செய்ய உரிமையுள்ளது என்று தெரிவிக்க வேண்டும். இதனை நீதிமன்ற கட்டளையாக பிறப்பிக்க வேண்டும்.

அவ்வாறு கட்டளை பிறப்பிக்கும் அதேசமயம் உரிய நீதிமன்றத்தால் தீர்வு ஒன்றின் மூலம் உடமையில் இருப்பவரை வெளியேற்றும் வரை தனது கட்டளைக்கு கீழ் படிய வேண்டும் என்றும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் கூற வேண்டும். மேலும் தனது நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பில் உடமையில் இருப்பவரை வெளியேற்ற அல்லது வெளியேற்ற நீதிமன்ற நடவடிக்கையை தவிர்ந்த வேறு வழிகளில் முயற்சிக்கக் கூடாது என்றும் மற்றவர்களுக்கு கட்டளை இட வேண்டும்.

**68(3) ஆம் பிரிவின் கீழ் தெரிவிப்பதாவது,**

ஒரு குறித்த காணியின் உடமையில் இருந்தவரை மாற்றுத் தரப்பார் பலாத்காரமாக வெளியேற்றினர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் அதுபற்றி பொலிஸார் விசாரணை செய்து நீதிமன்றத்திற்கு 66 ஆம் பிரிவின் கீழ் தகவல் அறிக்கையை சமர்ப்பிக்கும் தினத்திற்கு முன்னய இரண்டு மாத காலத்தில் அக்காணியில் உடமை செய்தவர் யார் எனப் பார்க்க வேண்டும்.

அத்தகவல் அறிக்கையில் இருந்து உடமை செய்தவர் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளார் என்று நீதிமன்றம் திருப்திப்பட்டால் நீதிமன்றம் வெளியேற்றப்பட்ட நபருக்கு அல்லது நபர்களுக்கு காணியின் உடமையை கொடுக்குமாறு மற்றக் கட்சியினருக்கு கட்டளை இட வேண்டும். அதே நேரம் மாற்றுக் கட்சியினர் உடமை செய்பவருக்கு இடைஞ்சல் கொடுக்கக் கூடாது என்றும் கூற வேண்டும்.

மேற்படி பிரிவினால் உண்மையான காணிச் சொந்தக்காரன் கூட காணியின் உடமையை பெறுவதில் கஷ்டத்தை சந்திக்க வேண்டும் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சர்வானந்தா அவர்கள் *இராமலிங்கம் எதிர் தங்கராசா* என்ற வழக்கில் 1982 2 SLR page 698 இல் குறிப்பிட்டுள்ளார்.

“Thus the duty of the judge in proceeding under section 68 is to ascertain which party was or deemed to have been in possession on the relevant data namely on the date of the filing of the information under section 66. Under section 68 the judge is bound to maintain the possession of such person even if hebe a rank trespasser as against any interference even by the right ful owner” என்றார். இதன்படி பலாத்காரமான முறையில் உடமை பெற்ற ஒருவர் தகவல் கொடுக்கும் தினத்திற்கு முன்னர் உள்ள இரண்டு மாதக் காலப் பகுதியில் ஒருவரது காணியை ஆக்கிரமித்தால் கூட சட்ட நிவாரணம் பெற்று விடுகிறார்.

ஆகவே காணி உரிமையாளர் வீணாக காலத்தைக் கழிக்காமல் தனது காணிக்குள் யாராவது நுழைந்தால் உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையேல் நீண்ட காலத்தின் பின்னரே தனது காணியைப் பெற முடியும். தனது உரிமையை நிலை நாட்ட உரிய நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். இதனை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.

உதாரணமாக:- வீட்டுச் சொந்தக்காரன் ஒருவன் தனது வீட்டை ஒரு குறித்த காலத்திற்கு குத்தகைக்கு கொடுக்கின்றான் என வைத்துக் கொள்வோம். குத்தகைக் காலம் முடிந்த பின்னரும் அவன் வீட்டை விட்டு எழவில்லை எனவும் வைத்துக் கொள்வோம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவனை வெளியேற்ற ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் வைத்துக் கொள்வோம். இத்தகைய நிலையில் பொலிஸார் விசாரணை செய்தால் தகராறு தொடங்கிய தினம் (வீட்டை விட்டு வெளியேறாத தினம்) அன்றும் அதற்கு முந்திய இரு மாத காலத்திலும் குத்தகைக் காரனே அந்த வீட்டில் வசித்தான் என பொலிஸார் நீதிமன்றத்திற்கு தகவல் அறிக்கையை சமர்ப்பிப்பர். நீதிமன்ற

விசாரணையில் எந்தவித சங்கடமும் இல்லாமல் குத்தகைக்காரன் ஆரம்ப நீதிமன்றத் தீர்வையைப் பெற்று அங்கு உடமை செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் வீட்டுச் சொந்தக்காரன் மனச்சோர்வு அடைவதுடன் பெரும் பணச் செலவையும் செய்தே அவனை வெளியேற்ற வேண்டிவரும்.

அதேநேரம் குத்தகையை பெற்றவன் எந்தவித குத்தகைப் பணத்தையும் கொடுக்காமலும் இதுவரையும் வீட்டை மட்டும் பாவிக்க விட்டு விட்டு காணியில் உள்ள பிரயோசனங்களை அனுபவித்து வந்த வீட்டுக்காரன் காணியில் உள்ள பிரயோசனங்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆகவே, இப்படியான ஒரு நிலையில் வீட்டுச் சொந்தக்காரன் செய்யக் கூடியது என்னவெனில் ஆரம்ப நீதிமன்றில் தோன்றி மேலும் ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்வது அநாவசியம் என்றும் குத்தகைக்காரனது உடமையை அகற்ற தான் சட்டவிரோதமாக முயற்சிக்கப் போவதில்லை என்றும் கூறி உரிய நீதிமன்றத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் உரித்து நிறுவல் வழக்கைத் தாக்கல் செய்வதே சிறந்ததாகும்.

உரித்து நிறுவல் வழக்கைத் தாக்கல் செய்யும் போது குத்தகைக்காரன் வீட்டுச் சொந்தக்காரனின் உரித்தை அங்கீகரித்து குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டதையும் குத்தகை ஒப்பந்தத்தையும் நீதிமன்றத்திற்கு காட்டலாம்.

உயர் நீதிமன்றம் பல வழக்குகளில் கூறியுள்ளது என்னவெனில் வாடகைக்காரன் அல்லது குத்தகைக்காரன் வீட்டிற்குள் நுழையும் போது வீட்டுச் சொந்தக்காரனின் உரித்தை அங்கீகரித்து உட்புகுந்தால் பின்னர் அதை நிராகரிக்க முடியாது என்றும் கூறி பலரை வெளியேற்றியுள்ளது.

மேலும் உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் உரித்துள்ளவருக்கே உடமையுண்டு என்பதால் குத்தகைக்காரனுக்கு எந்தவித சட்ட உரிமையும் இல்லாததால் வீட்டை விட்டு வெளியேறிட வேண்டும். இதனை புத்திசாலித்தனமாக கைக்கொள்ள வேண்டும். அதற்குரிய ஆலோசனையை பாதிக்கப் பட்டவருர்களுக்கு வழங்க வேண்டும்.

இதுவரையில் நாம் ஆரம்ப நீதிமன்றத்தினது உடமையாளரிடம் உரிய நீதிமன்ற தீர்ப்பு வரும் வரையும் இருக்க வேண்டும் என்ற விடயத்தை பார்த்தோம். இனி உடமை சம்பந்தமில்லாத வேறு உரிமையைப் பற்றிய விடயம் ஒன்று வரும் போது என்ன நடக்கும் எனப் பார்ப்போம். உதாரணமாக சேவக உரிமைகள் பற்றிய ஒரு தகராறு அல்லது எல்லை பற்றிய தகராறு வருகிறது என வைத்துக் கொண்டால் அத்தகைய தகராறுக்கான தீர்வையை 69(1)ஆம் 2 ஆம் உப பிரிவுகளின் கீழ் வழங்க வேண்டுமென சட்டம் கூறுகிறது. (1979 11 ஆம் பிரிவு புதுச் சட்ட அறிக்கை 21 ஆம் பக்கத்தை வசதியுள்ளவர் வாசிக்கவும்) இத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் அந்த உரிமை யாருக்குள்ளது அல்லது அனுமானிக்கக் கூடியது என்று பார்த்து உரிய நீதிமன்றத்தின் தீர்ப்பினால் மாற்றம் வரும் வரையும் தனது கட்டளை வலுவில் இருக்க வேண்டும் எனக் கூற வேண்டும்.

இந்தப் பிரிவின் கீழ் உள்ள முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

1. இது அதாவது இந்த கட்டளை உடமை சம்பந்தமானது அல்ல.

11. உடமை தவிர்ந்த மற்றும் உரிமைகளுக்கே இது உரியது.

111. இந்த உரிமையை அனுபவித்து வரும் போது அதற்கு தடையேற்பட்டிருக்க வேண்டும்.

1v. இரண்டு மாத உடமை இங்கு கவனிக்கப்படுவதில்லை.

இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட *ஜேமிஸ் எதிர் கன்னங்கரா* என்ற வழக்கு முக்கியமானது. 1989 2 SLR 350 ஆம் பக்கம் இந்த வழக்கில் எதிராளி குத்தகைக்காரனுக்கு மாணிக்கக் கல் அகழ்வதற்கு தடையாக அந்த நிலத்தில் வீடு ஒன்றைக் கட்டியுள்ளார் என்றும் அதனை அகற்றும் கட்டளையைத் தருமாறும் ஜேம்ஸ் கோரியிருந்தார். ஆரம்ப நீதிமன்றம் இதனை ஏற்று கட்டிடத்தை இடிக்குமாறு கோரியது. அப்பீலில் அப்பீல் நீதிமன்றம் உரிமை ஒன்றுக்கு இடைஞ்சலாக இருப்பது என்பது ஒரு வீட்டை உடைக்குமாறு கூறுவதற்குள் வராது எனக் கூறி ஆரம்ப நீதிமன்றத்தின் கட்டளையை ரத்துச் செய்தது.

ஆரம்ப நீதிமன்றத்திற்கு பொலிஸார் மட்டுமன்றி தனிப்பட்ட நபரும் வழக்கைத் தாக்கல் செய்யலாம். ஆரம்பத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்கு வலுவானது என்ற அபிப்பிராயம் காணப்பட்டது.

அதற்கு காரணம் சமாதான குலைவு ஏற்பட்டுள்ளது அல்லது ஏற்படப் போகிறது என்று கண்டால் பொலிஸார் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் வைக்கலாம். மேலும் பொலிஸார் இந்தத்தகராறு காரணமாக சமாதானக் குலைவு ஏற்படப் போகிறது அல்லது ஏற்பட்டுள்ளது என்று கூற சாட்சிகளையும் முன் வைக்கலாம். ஆனால் தனிப்பட்ட ஒருவரால் தாக்கல் செய்யப்படும் வழக்கில் அவரது சத்தியக் கடதாசியைத் தவிர வேறு சாட்சிகளை அவரால் முன் வைப்பது கஷ்டம்.

யாரும் முன் வர மாட்டார்கள். மற்றும் சமாதானத்தை குலைப்பவர் என்று கூறி மற்றப் பகுதியாரை கைது செய்து நீதிமன்றத்தில் முன் வைக்க முடியாது. ஆகவே பொலிஸார் தாக்கல் செய்யும் வழக்குக்கே முக்கியத்துவம் கொடுக்க

வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயம் ஆரம்ப காலத்தில் இருந்தது. அத்துடன் உயர் நீதிமன்றமும் 78 புதுச் சட்ட அறிக்கை 280 ஆம் பக்கத்தில் தனிப்பட்ட நபர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை மிக கவனமாகப் பரிசீலிக்க வேண்டும் என்றும் தெரிவித்தது.

அதேபோல் மேன்முறையீட்டு நீதிமன்றம் *வேலுப்பிள்ளை எதிர் சிவநாதன்* (1993) 1 SLR.123 ஆம் பக்கத்தில் தனிப்பட்ட நபர் தாக்கல் செய்யும் வழக்கில் அவரது ஓரம் சார்ந்த கருத்துக்கள் இடம்பெறுவதால் மிக அவதானமாக அதனை கவனிக்க வேண்டும் என்றது.

ஆயினும் இன்றைய நிலை வேறானது. அதாவது 66 (1) அ,ஆ. ஆகிய இரண்டு பிரிவுகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் சமமானவை என்றும் அதன் மூலம் நீதி மன்றத்திற்கு ‘‘நியாயாதிக்கம்’’ எழுகிறது என்றும் கூறலாம்.

எமது 66 ஆம் பிரிவு இந்திய குற்றவியல் நடவடிக்கை சட்டத்தின் 145 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ளது.

அதன்படி சமாதான குலைவு ஒன்று ஏற்படும் என்ற எண்ணத்தை பொலிஸார் மட்டும் காண முடியும் என்று கூறுவதை விட சாதாரண மனிதனும் பாதிக்கப்படுபவனும் கண்டு கொள்ளலாம் என்ற யதார்த்த உண்மையை அப்பிரிவு அடக்கியுள்ளது.

இவ்வழக்கு பற்றி அறிய வேண்டிய மேலும் சில தகவல்கள்.

- வழக்கிற்கு எந்த ஒரு பகுதியாரும் தெரிபடாத பட்சத்தில் நீதிமன்றம் அவ்வழக்கு உடமை பற்றியதாக இருக்கும் பட்சத்தில் உடமையில் உள்ளவரே தொடர்ந்து இருக்கும் கட்டளையைப் பிறப்பிக்கும்.

- தகராறு உடமையல்லாதவராக வேறு ஒரு உரிமையாக இருப்பின் அவ்வுரிமையை தொடர்ந்து பாவிக்க இடம் கொடுக்கும்.
- ஆரம்ப நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவையும் வழங்கலாம். அவ்வாறான உத்தரவை வழங்க கட்சிக்காரர்களது சத்தியக்கடதாசியும் எதிர் சத்தியக் கடதாசியும் சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவை சமர்ப்பிக்காத பட்சத்தில் இடைக்கால தடையுத்தரவை வழங்க முடியாது.
- விசாரணை சுருக்க முறையில் நடை பெற வேண்டுமென்பதுடன் வழக்கு ஆரம்பித்து மூன்று மாத காலத்திற்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

## முடிவுரை

ஆகவே இதுவரை பார்த்தவற்றில் இருந்து ஆரம்ப நீதிவான் நீதிமன்றத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் கட்டளையானது எந்தவித உரிமையையோ உடமையையோ இறுதியானதாக இருக்க வழங்க முடியாது என்றும் அவற்றை உரிய நீதிமன்றத்திடமே (மாவட்ட நீதிமன்றத்திலேயே) பெற வேண்டும் என்றும் கூறலாம்.

ஆயினும் ஒரு காணி நிலம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு சமாதானம் குலைகிறது அல்லது சமாதானக் குலைவு ஏற்படப் போகிறது எனக் கண்டால் பொலிஸார் அல்லது சாதாரண பிரஜை ஒருவன் நீதிமன்றத்திற்கு சென்று சமாதானத்திற்கு பங்கம் ஏற்படாமல் இருப்பதற்குரிய கட்டளையை ஆரம்ப நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். பின்னர் தனது உரிமையை மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

*******

## 02

## அட்டோனி தத்துவப் பத்திரத்தை நீதிமன்றம் ஏற்க வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?

பலர் தமது சட்ட வழிக் கடமைகளை தாமே செய்யாமல் இன்னுமொருவர் மூலம் செய்வதுண்டு. அதற்கு உரிய ஆவணம் அட்டோனித் தத்துவப் பத்திரம் ஆகும். இந்த அட்டோனித் தத்துவப் பத்திரம் எவ்வாறு வழங்க வேண்டும் என்று நாடுகள் சட்டங்களை இயற்றியுள்ளன.

அவற்றுக்கு அமைவாகவே ஒரு நாட்டில் வசிப்பவர் இன்னுமொரு நாட்டில் வசிப்பவருக்கு அட்டோனித் தத்துவப் பத்திரத்தை வழங்க வேண்டும். ஆனால் தற்போது தான் வசிக்கும் நாட்டில் அட்டோனித் தத்துவப் பத்திரத்தை எவ்வாறு வழங்க வேண்டும் என்று அந்நாட்டுச் சட்டம் கூறுகின்றதோ அவ்வாறு வழங்காமல் ஒரு நொத்தாரிஸின் முகதாவில்

அதனை வழங்குவதும் அவ்வாறு வழங்கப்பட்ட அட்டோனித் தத்துவத்தை அட்டோனித் தத்துவக்காரர் தனது நாட்டில் பதிவு செய்வதும் நடைமுறையில் காணப்படுகிறது.

இது நீண்ட காலமாக நடைபெற்றுவருவதால் அத்தகைய அட்டோனித் தத்துவத்தில் உள்ள குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுவதில்லை. ஆயினும் வழக்குகளில் இது சுட்டிக் காட்டப்பட்டு அத்தகைய அட்டோனித் தத்துவப் பத்திரத்தை எதிர்க்கட்சியாளர் சவாலுக்கு உட்படுத்தினால் பிரச்சினை பல தோன்றும். முக்கியமாக தோன்றுகின்ற பிரச்சினை அந்த அட்டோனித் தத்துவப் பத்திரத்தின் உண்மைத் தன்மை (Authentic) பற்றியதாகும். ஆகவே அட்டோனித் தத்துவத்தை வழங்கும் ஒருவர் மிக அவதானமாக அதனை வழங்க வேண்டும்.

இலங்கையர் பல வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அவர்களது நிலபுலங்கள்இன்னும் இலங்கையில் இருக்கின்றன. அவர்கள் இலங்கையில் உள்ள ஒருவருக்கு அட்டோனித் தத்துவத்தை வழங்கி அந்த நில புலங்களை விற்பனை செய்தும் வருகின்றனர். அவ்வாறு நடைபெற்ற விற்பனையுடன் தொடர்புடைய வழக்கு ஒன்று அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று மேன்முறையீட்டில் மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கும் அதன் பின்னர் உயர் நீதி மன்றத்துக்கும் வந்தது. மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களால் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கில் மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட அட்டோனித் தத்துவப் பத்திரம் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்த்தனர்.

இவ்வழக்கில் எழுப்பப்பட்ட வினாக்களில் அட்டோனித் தத்துவப் பத்திரத்துடன் தொடர்புடைய வினாவான இந்த வழக்கில் அடையாளப்படுத்தப்பட்ட அட்டோனித் தத்துவப் பத்திரம் முறைப்படி நிரூபிக்கப்பட்டதா? என்ற வினாவிற்கு உயர் நீதிமன்றம் இல்லை என்று தீர்ப்புக் கூறியது.

ஆகவே வெளிநாட்டில் இருந்து அட்டோனித் தத்துவப் பத்திரத்தை அனுப்புவர்களும் உள்நாட்டில் அதைப் பெறுபவர்களும் சட்ட வலுவான முறையில் அட்டோனித் தத்துவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் சங்கடங்களை சந்திக்க நேரிடலாம்.

## ஆவணம் ஒன்று இலங்கையில் இருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் போது கடைப்பிடிக்கும் முறை

இலங்கையில் வசிப்பவர்கள் பலர் சில ஆவணங்களை வெளிநாட்டில் வசிக்கும் அவர்களது உறவினர்களுக்கு அனுப்பி வைப்பது வழக்கம். உதாரணமாக பிறப்பு சாட்சிப்பத்திரம், விவாக சாட்சிப்பத்திரம், வேறும் கல்வித் தராதப் பத்திரம் என்பன உட்பட பலவற்றை அனுப்புவது வழக்கம்.

அப்படி அனுப்பும்போது முதலில் அந்த ஆவணங்களை அதற்குரிய திணைக்களங்களில் பெறுவதும் பின்னர் இலங்கை வெளிநாட்டு அமைச்சின் காரியாலயத்தில் அதனை சமர்ப்பித்து அந்த ஆவணத்தின் உண்மைத் தன்மையை (Authentic) கையொப்பம் உரியவரது என்று உறுதிப்படுத்தி அனுப்புவது வழக்கம். அவை சட்ட வலுக்கொண்டதாக அந்நாடுகள் ஏற்கும்.

அம் முறையிலேயே ஒரு நாட்டில் இருந்து இலங்கைக்கு வரும் அட்டோனித் தத்துவப் பத்திரமும் அனுப்பப்படல் வேண்டும். உதாரணமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அட்டோனித் தத்துவப் பத்திரத்தை அனுப்பும் ஒருவர் இந்திய வழக்கறிஞர் ஒருவரின் முன்னிலையிலும் இரு சாட்சிகளின் முன்னிலையிலும் தமது கையொப்பத்தை வைக்க வேண்டும்.

பின்னர் அதனை இந்திய வெளிநாட்டு அமைச்சின் காரியாலயத்திற்கு சமர்ப்பித்து அவர்களது கையொப்பத்தையும் பெற வேண்டும். அதேபோல் இலங்கை உயர் ஸ்தானிகர்

காரியாலய அதிகாரி முன்னிலையில் நிறைவேற்றப்படும் அட்டோனித் தத்துவப் பத்திரம் இலங்கை அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெற்றதன் பின்னர் அதனை இந்திய வெளிநாட்டு அமைச்சுக்கு சமர்ப்பித்து அவர்களது கையொப்பத்தையும் பெற வேண்டும்.

அவ்வாறு செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்படும் அட்டோனித் தத்துவப் பத்திரம் பெரும்பாலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. ஏனெனில் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால் நடைமுறையில் உள்ளது என்னவெனில் இந்திய வழக்கறிஞரின் கையெழுத்தைப் பெற்றதும் அல்லது இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் அதிகாரியின் கையொப்பத்தை பெற்றதும் அதனை இங்கு அனுப்பி விடுவது உண்டு.

அப் பத்திரத்தில் உள்ளவர்கள் இன்னும் வழக்கறிஞராக இருக்கிறார்களா? அல்லது ஸ்தானிகர் காரியாலயத்தில் உள்ளவர் தானா கையொப்பம் வைத்தார்? என்பதற்கு அந்நாட்டின் உறுதிமொழி இதில் இல்லை.

ஆகவே இதனை சவாலுக்கு உட்படுத்தினால் பிரச்சினை ஏற்படும். ஆகவே ‘‘செய்வன திருந்தச் செய்’’ என்பதைப்போல் அட்டோனித் தத்துவத்தையும் திருந்தச் செய்ய வேண்டும். ஆயின் இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.அதாவது சட்டப்படி அட்டோனித் தத்துவப் பத்திரத்திற்கு சான்றுரை (Attestation) தேவையில்லை எனவும் தொலைபேசியால் வொயிஸ் மெயில் மூலம் வீடியோ மூலம் ஒருவரை தனது அட்டோனித் தத்துவக்காரராக நியமிக்க மற்றவருக்கு அதிகாரம் உண்டு என்பதை உயர் நீதிமன்றம் முன்னைய வழக்குகளில் ஏற்றுக் கொண்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டமான அட்டோனித் தத்துவப் பத்திரத்தின் பதிவு பின்வருமாறு கூறுகிறது.

இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது அட்டோனித் தத்துவப் பத்திரம் என்பது (சட்டத்தரணி ஒருவருக்கு கொடுக்கும் அதிகாரத்தையும் சட்ட முகவர் ஒருவருக்கு கொடுக்கும் அதிகாரத்தையும் தவிர்ந்த ஏனைய ஒருவருக்கு ஒரு செயலை செய்யும்படி அல்லது வியாபாரம், தொழில் என்பவற்றை கொண்டு நடத்துவதற்கும் கொடுக்கும் அதிகாரமாகும்.

இந்தத் தத்துவப்பத்திரம் இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் அல்லது ஒரு நொத்தாரிஸ் முன்னிலையில் அல்லது சான்றுரையுடன் அல்லது சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையில் நீதிவான் முன்னிலையில் ஸ்தானிகர் அல்லது வெளிநாட்டு பிரதிநிதி ஒருவர் முன்னிலையில் அல்லது வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் முன்னிலையில் வழங்கும் ஒரு ஆவணமாகும்.

இங்கு அட்டோனித் தத்துவப் பத்திரம் எழுத்தில் இருக்க வேண்டுமென்றோ அது பதிவு செய்யப்பட வேண்டுமென்றோ கூறவில்லை. எனினும் நடைமுறையில் இது இல்லை. நடைமுறையில் ஒரு சட்டத்தரணியே அட்டோனித் தத்துவப்பத்திரத்தை தயாரிக்கின்றார், சான்றுரை வழங்குகிறார், பதிவு செய்தும் கொடுக்கிறார்.

இதுவே நடைமுறையில் உள்ளது. எழுத்தில் இல்லாமல் அவர் எனக்கு அதிகாரம் அளித்துள்ளார் என்று கூறுவதை நீதிமன்றம் ஏற்பதில்லை.

## அட்டோனித் தத்துவம் எழுத்தில் இருக்க வேண்டும் என்பதற்கு குறிப்படும் நல்ல காரணங்கள்

தற்கால உலகில் ஒருவருக்கு ஒரு அதிகாரத்தை அளித்துவிட்டு பின்னர் தான் அவ்வதிகாரத்தை அளித்தது அச் செயலுக்காக அல்ல என்றும் அவர் தவறாகச் செய்துவிட்டார்

என்றும் வழக்காடுவது உண்டு. இன்னுமொரு சம்பவமும் நிகழ்கிறது.

அட்டோனித் தத்துவத்தை வழங்கிவிட்டு பின்னர் அதனை இரத்துச் செய்யாமல் அட்டோனித் தத்துவத்தை வழங்கியவரே அட்டோனித் தத்துவக்காரருக்கு வழங்கப்பட்ட செயல்களை செய்வதும் நடைபெறுகிறது.

அதாவது முதல்வரும் முகவருமாக இருவரும் ஒரே செயலை செய்யும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. ஆகவே அட்டோனித் தத்துவப் பத்திரம் எழுத்தில் இருப்பின் இந்த சிக்கல்களை தடுக்கலாம். அத்துடன் முதல்வர் முகவருக்கிடையே ஏற்படும் சிக்கல்களையும் தடுக்கலாம். கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அட்டோனித் தத்துவக்காரர் மீறாமலும் பார்த்துக் கொள்ளலாம்.

**அட்டோனித் தத்துவம் ஒன்றை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும்போது அதன் உண்மைத் தன்மையை நிறுவுவது எப்படி?**

ஆவணம் ஒன்று நிறுவுதலுக்கு உட்பட்டது (subject to proof) என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டால் அதனை எவ்வாறு நிரூபிப்பது என்பது சிவில் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 154 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி சாட்சியங்கள் நீதிமன்றுக்கு வந்து சாட்சிக் கூண்டில் நின்று சாட்சி கூறுவதன் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். சாட்சியாளராக வர வேண்டியவர்கள் அந்த ஆவணத்திற்கு கையொப்பம் வைத்த சாட்சிக்காரர் அல்லது அதற்கு கையொப்பம் வைத்த சட்டத்தரணி அவ்வாவணத்தை நிறைவேற்றியவரை எனக்குத் தெரியும் என்று சான்று உரையில் கூறியிருந்தால் அவரையும் தேவையாயின் அழைக்கலாம். அவர்கள் இல்லாத பிறரால் இது நிரூபிக்க முடியாது.

சில வழக்குகளில் இந்தியாவிலும் இலங்கையிலும் எடுகோள்கள் (presumption) இன் உதவி கொண்ட அதாவது ஒரு ஆவணத்தின் பிரதி இருந்தால் மூலம் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டுமென விவாதிக்கப்பட்டன. ஆயினும் நீதிமன்றங்கள் இதனை ஏற்கமறுத்தன.

ஒரு ஆவணத்தின் உண்மைத் தன்மையானது எடுகோளை விட மிக உயர்ந்த நிலையில் நிரூபிக்க வேண்டும். ஏனெனில் அவ்வாவணத்தில் கையொப்பம் இட்டவர் இவர்தான் என்பது? சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்க வேண்டும் என்று *மோகன் சட்* என்ற இந்திய வழக்கில் தீர்க்கப்பட்டது.

காரியாலயத்தில் இருந்து ஒரு பிரதியை எடுத்தால் அது மூலத்தின் பிரதி என்பது உண்மையாயினும் அம்மூலப் பிரதியை நிறைவேற்றியவர் இவர்தான் அப்பிரதியை கொண்டு தீர்மானிக்க முடியாது என்றே நீதிமன்றங்கள் கூறுகின்றன. உள்நாட்டு விடயத்தில் சாட்சியாளர்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

வெளிநாட்டு ஆவணங்களை பொறுத்தவரை சாட்சியியல் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் படி விசேட நிபுணர்களின் சாட்சியம் கேட்கப்பட்டு நிரூபிக்கப்படலாம். இம்முறைகளிலேயே அட்டோனித் தத்துவப் பத்திரமும் நிரூபிக்கப்பட வேண்டும். இல்லையேல் அது நிரூபிக்கப்படவில்லை என்றே கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய உலகில் தொழில்நுட்பங்கள் பல்கிப் பெருகியுள்ளதால் சில போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஏதோ விதத்தில் பெறப்படும் உரியவரின் கையொப்பத்தை நூற்றுக்கு நூறு ஒத்த கையொப்பங்களும் போலியாக வைக்கப்படுவதை நாம் அறியலாம். கடன் அட்டை (credit card) மோசடிகள் போலி நாணய நோட்டுக்கள்

தயாரிக்கப்படுதல் இவ்வுலகில் போலி ஆவணம் தயாரிப்பது கஷ்டமல்ல.

ஆகவேதான் நீதிமன்றங்களும் சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையும் சாட்சியியல் சட்டமும் ஆவணம் ஒன்றின் உண்மைத் தன்மையை அதில் கையொப்பம் இட்ட சாட்சிக்காரர்கள் சாட்சியம் கூறி நிரூபிக்க வேண்டுமென்று கூறுகின்றன. வெளிநாடு அட்டோனித் தத்துவப் பத்திரம் உரிய வெளிநாட்டு அமைச்சின் அதிகாரியின் கையொப்பம் இல்லையேல் ஏற்பதில் பிரச்சினை எழலாம்.

**அட்டோனித் தத்துவப் பத்திரம் மோசடித் தடுப்பு கட்டளைச் சட்டப் பிரிவுகளுக்கு அமைய நிறைவேற்றப்பட வேண்டும் என கூறப்படுவது ஏன்?**

அட்டோனித் தத்துவப்பத்திரம் தற்போது மோசடி தடுப்புச்சட்டப்படி நிறைவேற்றப்படுவதில்லை. மோசடித் தடுப்புக்கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளின்படி ஒரு அசையா ஆதனம் தொடர்பான செயற்பாடுகள் ஒரு நொத்தாரிஸ் முன்னிலையிலும் இரண்டு சாட்சிக்காரர் முன்னிலையிலும் அவர்கள் அனைவரும் சமூகமாயிருக்கும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் நிறைவேற்றப்பட்ட வேண்டுமென்கிறது.

இதனால் தான் காணி ஒன்றை உரித்து மாற்றம் செய்யும்போது நாம் சாட்சிக்காரர் இருவருடன் நொத்தாரிஸ் காரியாலயத்திற்கு செல்வதும் கையொப்பம் இடுவதும் வழக்கம். இவ்வாறு கையொப்பம் இட்டதன் பின்னரும் பலர் வழக்குகளை தாக்கல் செய்வது மாற்றப்பட்ட காணி மேலே கூறிய முறைப்படி மாற்றப்படவில்லையென்றும் அம்மாற்றத்தை தள்ளுபடி செய்யுமாறு கோருவதை நாம் காணலாம்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் உறுதியை நிரப்பாமல் அல்லது பூர்த்தி செய்யாமல் வெற்றுக் கடதாசியில் கையொப்பத்தை வாங்கி பின்னர் நிரப்பியதாக கூறுவதும்

என்ன எழுதியிருக்கிறது என்று கூறாமலும் தெரியாத மொழியிலும் அது எழுதப்பட்டதாகவும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு சாதகமான தீர்ப்புக்களையும் பெற்றுள்ளன.

நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவு ஒன்றில் நொத்தாரிஸ் ஒருவரால் நிறைவேற்றப்பட்ட உறுதியொன்று அதன் தலையங்கத்தை கொண்டோ உள்ளடக்கத்தைக் கொண்டோ தீர்மானிக்காமல் சாட்சியங்களை கொண்டு நீதிமன்றம் தீர்மானிக்கலாம் என்கிறது.

ஆகவே மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தை இயற்றியவர்கள் காணி ஒன்றின் உரித்து மாற்றம் உரியவரிடமிருந்து மாற்றப்பட வேண்டும் என்ற உன்னத அடிப்படையில் இயற்றப்பட்டதாகும். போலி உரித்து மாற்றங்கள் தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் நடைமுறையில் இது சில சந்தர்ப்பங்களில் மாறுபட்டு நிகழ்வதை காணலாம்.

காணி ஒன்றின் உரித்தை மாற்றுவதற்கு மேற்படி நிபந்தனைகளை சட்டம் வைத்திருக்க அச்சட்ட நிபந்தனைகளுக்கு முரணான முறையில் அட்டோனித் தத்துவத்தின் மூலம் அசையும் ஆதனம் மாற்றப்பட இடமுண்டு.

உதாரணமாக காணிக்கு உரித்தானவருக்கு அந்த உரித்து பரம்பரை பரம்பரையாக அல்லது உரித்து மாற்றம் செய்தவர் உரிய முறைப்படி உரித்தை பெற்று உரித்தை மாற்றுகின்றார் என வைத்துக்கொள்வோம்.

ஆகவே இங்கு உரித்து மாற்றப்பட்டியல் உரித்துள்ளவரிடமிருந்து உரித்துமாறி வந்ததை எடுத்துக் காட்டும். அந்த உரித்து மாற்றங்கள் மோசடித் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் படி நிறைவேற்றப்பட்ட உரித்து மாற்றங்களாகும்.

அவ்வாறு இல்லாமல் உரித்துமாற்றம் பெற்றவர் இன்னுமொருவருக்கு அட்டோனித் தத்துவத்தைக் கொடுத்து தனது சொத்தை கைமாற்றம் செய்கிறார் எனவும் வைத்துக் கொள்வோம். அதன்படி அட்டோனித் தத்துவக்காரர் அக்காணியை இன்னுமொருவருக்கு விற்கிறார்.

விற்பவருக்கு அக்காணியில் உரித்து இல்லை. எனினும் ஒருவரின் முகவராகவே செயல்பட அதிகாரம் உண்டு. ஆகவே உரித்து இல்லாத ஒருவர் இங்கு உரித்து மாற்றம் செய்வதால் உரித்துப்பட்டியல் உடைந்து புதிய ஒரு நிலையேற்படுகிறது. இது அட்டோனித் தத்துவத்தினால் வந்ததாகும்.

மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் பாதுகாப்பு இங்கு இல்லாமல் போய்விடுகிறது. இரண்டு சாட்சிகளின் முன்னிலையிலும் நொத்தாரிஸ் முன்னிலையிலும் உரித்துப் பெற்றவரே உரித்தை மாற்றலாம் என்ற கட்டுப்பாடு நீங்கி சாதாரணமான அட்டோனித் தத்துவத்தின் கீழ் அந்த சொத்தை மாற்ற முடிகிறது.

தர்க்கரீதியாகப் பார்ப்பின் இது பிழையானதாகும். ஆகவேதான் அட்டோனித் தத்துவத்தின் கீழ் விற்பனை செய்யப்படும் காணிகள் மிக அவதானத்துடன் செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் அட்டோனித் தத்துவப் பத்திரத்தை பெற்றவர் உரித்தை கைமாற்றம் செய்யும்போது இரண்டு சாட்சிகளின் முன்னிலையிலும் நொத்தாரிஸ் முன்னிலையிலும் கையொப்பம் இட வேண்டும் என்பது உண்மையே. ஆயின் அட்டோனித் தத்துவத்தை பெறுபவர் அவ்வாறு இரண்டு சாட்சிகளின் முன்னிலையிலும் நொத்தாரிஸ் முன்னிலையிலும் ஒரே சமயத்தில் கையொப்பம் இடுவதில்லை.

அவர் விரும்பின் நாட்டின் பிரதிநிதி ஒருவரின் முன்னிலையில் அல்லது சமாதான நீதிவான் முன்னிலையிலும் கையொப்பத்தை வைக்கலாம். அவ்வாறு பெற்றாலும் அவருக்கு உரித்து வந்து விடுகிறது. இது மோசடித் தடுப்பு கட்டளைச் சட்டத்திற்கு எதிரானது ஆகும்.

எனவே ஒருவர் அட்டோனித் தத்துவப் பத்திரம் தயாரிக்கும்போது தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சாட்சியாக வந்த சாட்சி சொல்லக் கூடியவர்களையே தமக்குள் சாட்சியாக தெரிய வேண்டும்.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் உரியமுறையில் அட்டோனித் தத்துவத்தை வழங்க வேண்டும். சாதாரணமாக அந் நாட்டில் உள்ள ஒரு சட்டத்தரணியின் ஒப்பம் மட்டும் போதாது. அவர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது என்ற குறிப்பும் அவரது இலச்சினையும் வேண்டும்.

## அட்டோனித்தத்துவம் ஒன்று பதிவு செய்யப்படும் முறை

அட்டோனித் தத்துவப் பத்திரம் பதிவு திணைக்கள ஆணையாளராலேயே பதிவு செய்யப்பட வேண்டும். தற்போது இப்பதிவு தத்தமது பகுதிக் காணிக் கந்தோரில் உள்ள ஆணையாளரின் பிரிவினாலும் பதியப்படுகிறது.

அட்டோனித் தத்துவத்தை பெற்றவர் தான் பெற்ற அட்டோனித் தத்துவப்பத்திரத்தை பதிவு செய்ய விரும்பின் மூலத்தை அதன் போட்டோ பிரதி ஒன்று நொத்தாரிஸால் உண்மைப் பிரதியென சிபாரிசு செய்யப்பட்ட பிரதி ஒன்றையும் சத்திய கடதாசி ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த சத்தியக் கடதாசியில் இந்த அட்டோனிதத்துவப் பத்திரம் இன்னும் வலுவில் உள்ளது என்றும் தனது அறிவுக்கு எட்டிய மட்டில் உண்மையானது என்றும் கூற வேண்டும். அதற்குரிய முத்திரையும் ஒட்ட வேண்டும். அத்தகைய பதிவு

ஒன்றுக்காக ஒரு தத்துவப்பத்திரம் கிடைத்ததும் பதிவாளர் அதனை தனது காரியாலயத்தில் அதற்கென வைத்துள்ள புத்தகத்தில் பதிவு செய்ததன் பின்னர் அப்புத்தகத்தின் இதழின் இலக்கத்தையும் திகதியையும் அட்டோனித் தத்துவப்பத்திரத்தின் இலக்கத்தையும் எழுதி உரியவரிடம் திருப்பி கொடுக்க வேண்டும். நொத்தாரிஸால் உண்மைப் பிரதி என எழுதப்பட்ட போட்டோ பிரதியை தனது காரியாலயத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

## அட்டோனித் தத்துவம் இரத்துச் செய்யப்படும் முறை

அட்டோனித்தத்துவப்பத்திரம் இரத்து செய்யப்பட்டால் அல்லது மீளப் பெறப்பட்டால் அல்லது அட்டோனித்தத்துவக்காரர் தமது பதவியை இழந்தால் அட்டோனித்தத்துவத்தை வழங்கியவர் அல்லது அதனைப் பெற்றவர் பதிவாளர் நாயகத்திற்கு சத்தியக் கடதாசியுடன் அதனைத் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் கசட் அறிவித்தல் மூலமும் மும்மொழிகளிலும் அந்த அட்டோனித் தத்துவம் செயல் இழந்துள்ளதாக தெரிவிக்க வேண்டும். அதுவரையும் செய்யப்பட்ட செயல் அனைத்துக்கும் அட்டோனித்தத்தும் வழங்கியவர் பொறுப்பாவார். பதிவாளர் நாயகம் இவ்வறிவித்தலைப் பெற்றதும் அதனைப் பதிவு செய்ய வேண்டும். பின்னர் இரத்துச் செய்யப்பட்ட விபரத்தை தனது புத்தகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட புத்தகத்தை பார்வையிட வேண்டுமானால் பதிவாளர் நாயகத்திற்கு எழுத்திலான விண்ணப்பத்தைச் செய்து அதற்கு செலுத்த வேண்டிய முத்திரை வரியை செலுத்தி அதனைப் பார்வையிடலாம்.

## முடிவுரை

இறுதியாக அட்டோனித் தத்துவத்தின் மூலம் ஒருவர் தனது உரிமையை தற்காலிகமாக கை துறந்து வேறு ஒருவருக்கு தனது உரிமையை வழங்குவதால் உண்மையில் அவர் அப்படி வழங்கினாரா? என்ற வினா நீதிமன்றத்தில் எழும்போது அவரது கையொப்பம் முக்கியமாக கவனிக்கப்படுகிறது. சாட்சியாளர்களாக அல்லது சட்டத்தரணியாக தத்துவப்பத்திரத்தின் இருந்தவரின் சாட்சியமும் பெறப்படுகிறது. இன்று பல நில புலங்கள் பொய்யான அட்டோனித் தத்துவப்பத்திரத்தின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன என்று கூறி பல நீதிமன்றங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. கொழும்பில் பெரும் புள்ளிகள் பலர் தமது சொத்தை இழந்தும் உள்ளனர்.

ஆகவே அட்டோனித் தத்துவப்பத்திரம் மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை தழுவி நிறைவேற்றப்படுவதுடன் உரிய முறையில் பாதுகாப்பாகவும் பயன்படுத்தினால் மோசடிகள் குறையும். இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் நாம் கூற வேண்டும். அட்டோனித் தத்துவத்தால் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாது. உதாரணமாக குற்றவியல் வழக்குகளில் அட்டோனித் தத்துவக்காரர் தனது முதல்வருக்காக தெரிபட்டு சிறை செல்ல முடியாது. தண்டனை பெற முடியாது. விவாகரத்து வழக்குகளில் கணவனாக அல்லது மனைவியாக நின்று சாட்சி சொல்ல முடியாது. சில அட்டோனித் தத்துவப் பத்திரங்களில் அட்டோனித் தத்துவம் பெற்றவர் இன்னுமொருவருக்கு தான் பெற்ற அட்டோனித் தத்துவத்தை வழங்கலாம் என்ற வாசகங்களை நான் கண்டு உள்ளேன். இது சரிதானா? என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனெனில் முதல்வர் ஒருவர் முகவர் ஒருவருக்கு வழங்கும் அதிகாரத்தை முகவர் இன்னுமொருவருக்கு வழங்கலாமா? என்பது கேள்விக்குரியது என்பதினாலாகும். முதல்வருக்கும் மூன்றாம் நபருக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கும்போது மூன்றாம் நபர் செய்யும் தவறுக்கு யார் பொறுப்புக் கூறுவது என்பது பிரச்சினையானது என்பதினாலாகும்.

******

## 03

## முன் தீர்ப்பத்தடை எனும் "றெஸ் ஜீடிகாட்டா" சட்ட விதி பிரிவிடல் வழக்குக்கு செல்லாதது ஏன்?

மிகச் சமீபத்தில் கொழும்பு மேல் நீதிமன்றம் முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா அவர்களுக்கு எதிரான வழக்கு ஒன்றை மீண்டும் விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு நியாயதிக்கம் இல்லை என்று தீர்த்தது யாவரும் அறிந்ததே.

''ஹை கோப'' வழக்கு என பொதுவாக அழைக்கப்பட்ட அவ் வழக்கின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இராணுவத் தளபதிக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு நீதி கண்டதால் அதே நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யமுடியாது என்று மேல் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

இம்முடிவு ரெஸ் ஜூடிக்காட்டா என்ற விதிக்குள் வருவதாகும். ஆகவே பலரும் இதன் பொருளை அதாவது ரெஸ் ஜூடிக்காட்டா res judicata என்றால் என்ன? அதனை எந்த எந்த வழக்குகளில் பாதுகாப்பாக எடுக்கலாம்? என தெரிந்து கொள்ள விரும்புவது இயல்பேயாகும்.

### Res judicata நீதி கண்ட வழக்கு

நீதிமன்ற வடவடிக்கைகளில் ரெஸ் ஜூடிகாட்டா என்பது இரண்டு காரணங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு விதியாகும்.

ஒன்று, ஒரே நிகழ்வுகளின் அடிப்படையில் ஒருவர் இரண்டு தடவை ஆபத்தை சந்திக்கக் கூடாது என்பது, மற்றையது ஒரு வழக்குக்கு அடிப்படையான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் பல தடவை வழக்குகளை தாக்கல்

செய்வதை தடுத்து அதனை ஒரு வழக்கிலேயே முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதாகும்.

இதனால்தான் இப்பாதுகாப்பானது குற்றவியல் (criminal) வழக்குகளிலும் குடியியல் (civil) வழக்குகளிலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலே கூறிய கொழும்பு மேல் நீதிமன்ற தீர்ப்பு குற்றவியல் வழக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றவியல் நடவடிக்கையில் ரெஸ் ஜூடிகாட்டா விதி

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையே குற்றவியல் வழக்குகளை நடத்தும் முறையை எடுத்துக் கூறும் சட்டமாகும். அதே போல் குடியியல் வழக்குகளை நடத்தும் முறைகூறும் சட்டம் சிவில் நடவடிக்கை முறைச்சட்டமாகும். இவ் விதிகளுக்கு புறம்பாக வழக்குகளை நடத்தமுடியாது.

ஆயினும் நடைமுறையில் விளக்கக் குறைவால் பலர் இந்த ரெஸ் ஜூடிகாட்டா விதியை எடுப்பதுண்டு. இதனாலேயே மேற்படி நடைமுறைச் சட்டங்கள் ரெஸ்ஜூடிகாட்டா எனக் கூறாமல் அவ்விதியின் குணாம்சங்களைக் கூறியுள்ளன.

குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 314 ஆம் பிரிவில் இவ்விதியின் விளக்கம் பின்வருமாறு உள்ளது. முன்பு விடுதலைத் தீர்ப்பு அழிக்கப்பட்டமை அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டமை பற்றி என்னும் தலையங்கத்தின் கீழ் இவ் விதியை பின்வருமாறு விளக்குகின்றது.

பிரிவு 314 (1) தவறொன்றுக்காக தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றமொன்றினால் ஒரு முறை விளங்கப்பட்டு அத்தகைய தவறுக்காகக் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்ட ஆளொருவர் அத்தகைய குற்றத் தீர்ப்பு அல்லது விடுதலைத் தீர்ப்பு வலுவிலிருக்கும் போதில் அதே தவறுக்காகவோ அல்லது அவருக்கெதிராகச் செய்யப்பட்ட குற்றச்சாட்டிலும்

வேறுபட்டதான ஒரு குற்றச்சாட்டு அதே நிகழ்வுகளின் அடிப்படையில் வேறெந்தத் தவறுக்காக 166ம் பிரிவின் கீழ் செய்யப்படக்கூடுமோ அந்த தவறுக்காகவோ அல்லது அதே நிகழ்வுகளின் அடிப்படையில் வேறெந்த தவறுக்காக 167 ஆம் பிரிவின் கீழ் அவர் குற்றம் தீர்ப்பளிக்கப்படல் கூடுமோ அந்தத் தவறுக்காகவோ மீளவும் விளங்கப்படுத்துவதற்கு ஆளாதலாகாது என்கிறது.

மேலே கூறிய விதியின் அடிப்படையிலேயே ஒருவருக்கு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் வழக்கு விளங்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் அந்த தீர்ப்பு தண்டனையாக இருக்கலாம் அல்லது விடுதலையாக இருக்கலாம் மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என நீதிமன்றங்கள் தீர்ப்புக்களை வழங்கிவருகின்றன. ஹைகோப் வழக்கில் இப் பாதுகாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### சிவில் வழக்குகளில் ரெஸ் ஜூடிக்காட்டா விதி

சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 34,207,406 ஆம் பிரிவுகளில் இவ் விதி காணப்படுகிறது எனலாம்.

இந்த மூன்று பிரிவுகளில் மட்டுமே மேற்படி விதியின் கொள்கைகள் இருக்கின்றன என்பது பற்றி அபிப்பிராய பேதங்கள் உள்ளன.

*சமச்சி எதிர் பீரிஸ்* என்ற வழக்கில் முன்னைய பிரதம நீதியரசரான லாசொலஸ் அவர்கள் கூறியது என்னவெனில், சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 34,207,406 ஆம் பிரிவுகளில் நீதி கண்ட வழக்குத் தத்துவம் பொதிந்துகிடக்கிறது என்பதை மறுக்க எந்த நியாயமும் இல்லை என்றார். ஆனால் *பழனியப்பா எதிர் கோமிஸ்* வழக்கில் பெரேரா நீதியரசர் கூறியது என்னவெனில் எமது சிவில் நடவடிக்கை முறைச் சட்டகோவையின் 207 ஆம் பிரிவில் மட்டுமே நீதிகண்ட வழக்கின் தத்துவம் பொதிந்து

கிடக்கிறது என்று கூறினார். இவ்வாறு ஆரம்ப காலத்தில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவினும் தற்போது சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 207ஆம் பிரிவில் அத் தத்துவம் பொதிந்து கிடக்கிறது என்பதை நீதிமன்றங்கள் தமது தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளன.

ஒரு வழக்கில் நீதி கண்ட வழக்கின் தத்துவங்கள் ரெஸ் ஜூடிகாட்டா ஏற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுமானால் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்:

1. தகுதியான நியாயாதிக்கமுள்ள நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்க வேண்டும்.
2. வழக்கை விசாரித்து இறுதித் தீர்வை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
3. நிகழ்வுகள் ஒன்றாக இருக்கவேண்டும்.
4. வழக்கெழு காரணம் ஒன்றாக இருக்க வேண்டும்.
5. கட்சிக்காரர்கள் ஒரே ஆட்களாக இருக்க வேண்டும்

பின்வரும் வழக்குகள் அவற்றை உறுதிப்படுத்துகின்றன: *பொன்னம்பலம் எதிர் முருகேசு* என்ற வழக்கையும் *பீரிஸ் எதிர் பீரிஸ்* என்ற வழக்கையும் நீதிமன்றம் ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்தது. பின்னர் வேறு ஒரு தினத்தில் அதே நிகழ்வுகளைக் கொண்ட வேறு ஒரு வழக்கை கட்சிகாரர்கள் தாக்கல் செய்தபோது நீதிமன்றம் பின்வருமாறு கூறியது.

“An order of Dismissal of aclaim application was not res judicata என்றது. 4 புதுச்சட்ட அறிக்கை ஆதாரமாகும். அதே போல கோரிக்கை ஒன்று முறைப்படி அமையாமல் இருந்ததால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தமை மீண்டும் ஒரு வழக்கை தாக்கல் செய்ய res judicata தடையாக இல்லை என்றது. 9 புதுச்சட்ட அறிக்கை ஆதாரமாகும்.

இன்னுமொரு வழக்கில் சட்டம் பற்றிய பிழையான தீர்ப்பானது இன்னுமொரு வழக்கை தாக்கல் செய்ய res judicata தடையாக இருக்காது என்றது.

இவ்வாறு நூற்றுக்கணக்கான வழக்குகளில் res judicata என்ற பாதுகாப்பையெடுத்து பலர் தோல்வி கண்டுள்ளனர். ஏனெனில் இது கடுமையான விதியாகும்.

ரெஸ் ஜூடிகாட்டாவின் உண்மையான விளக்கம் என்ன என்பதை அறியாமல் இருப்பது மற்றையது அறிந்தும் தவறான முறையில் அதனை கிளப்புவதும் ஆகும். எனவே ரெஸ் ஜூடிகாட்டா ஒரு சிவில் வழக்கில் பாதுகாப்பு தரவேண்டுமானால் கட்டாயம் அந்த வழக்கு விளங்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

பல்வேறு காரணங்களுக்காக நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து அல்லது பிழையான தீர்ப்பை வழங்குவது போன்ற சந்தர்ப்பங்களில் res judicata என்ற பாதுகாப்பை எடுக்கமுடியாது. முன்னைய வழக்கில் இறுதி தீர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

## நீதி கண்ட வழக்கு என்ற பாதுகாப்பு செல்லுபடியாகாத வழக்குகள்

விவாகரத்து வழக்குகளுக்கு ரெஸ் ஜூடிகாட்டா தத்துவம் செல்லாது என நீதிமன்றங்கள் தீர்த்துள்ளன. பல வழக்குகளில் இது ஆலோசிக்கப்பட்டது. *விஜேயசிங்க எதிர் அஸ்லின் நோனா* என்ற வழக்கில் இது பின்வருமாறு தீர்க்கப்பட்டது.

இந்த விவகாரத்து வழக்கு சோரம் போதல் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் விவாகரத்து கோரப்பட்ட வழக்காகும். வாசகர்கள் அறியவேண்டிய ஒரு விடயம் என்னவெனில், விவாகரத்தை சோரத்தின் அடிப்படையில் கோரும் வழக்காளி தனது பிராதில் சோரம் போன பெண்ணுடன் தொடர்புகொண்ட நபரின் பெயரையும் எதிரியாக குறிப்பிட வேண்டும்.

சில சமயம் அவரது பெயர் தெரியாவிட்டால் ஒரு சத்திய உரையைத் தாக்கல் செய்யவேண்டும். இல்லையேல் அந்தபிராது முறை தவறிய பிராது என்றே கொள்ளப்படும். பின்னர் சோரம் சம்பந்தமான குற்றச்சாட்டை நிரூபிக்க சாட்சியங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இது இலகுவான காரியமல்ல விவாகமான ஒருவர் அது ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி தனது துணைவர் இல்லாத ஒருவருடன் தொடர்புகொள்ளும் போது மிகுந்த கவனத்துடனேயே தொடர்பு வைத்திருப்பார். இரகசியமானதாகவே இருக்கும்

ஆகவே, அவரை வழக்கின் எதிரியாக்கி குற்றவாளியாக்குவது கஷ்டம். இவ்வாறான ஒரு வழக்கையே வழக்காளி *விஜேயசிங்க எதிர் அஸ்லின் நோனா* வழக்கில் தாக்கல் செய்திருந்தார். பிராதில் சோரம் பற்றி ஒரு பந்தியை குறித்திருந்தாரே தவிர சோரத்தை நிரூபிக்க நீதிமன்றத்தில் சாட்சியத்தை முன்வைக்கவில்லை.

எதிராளி தனது பாதுகாப்பை பின்வருமாறு எடுத்தார். வழக்காளி தாக்கல் செய்த வழக்கில் தான் வன்ம உறவு அறுத்தல் செய்ததாக கூறியே வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சோரம் போதல் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும் இதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறினாள்.

மேலும் அவள் தெரிவித்ததாவது, முன்னைய விவாகரத்து வழக்கில் தனக்கு பிறந்த பிள்ளை வழக்காளியின் பிள்ளை இல்லை என தீர்க்கப்பட்டது தவறு என்றும் கூறினார்.

உயர் நீதிமன்றம் இவ்வழக்கில் பின்வரும் தீர்ப்பை வழங்கியது. முன்னைய வழக்கில் பிள்ளையின் பிறப்பு பற்றிய வினாவிற்கு நீதிமன்றம் கூறிய தீர்ப்பு பின்னைய வழக்கிற்கு முரண் தடையாக அமையாது என்றும் இந்த வழக்கில் Res judicata என்ற வாதம் செல்லாது என்றும் கூறியது.

விவாகரத்து வழக்குகளில் வன்ம உறவு அறுத்தல் அல்லது சோரம் போதலின் கீழ் வழக்கை தாக்கல் செய்துவிட்டு பின்னர் சமாதானம் ஆவதும் இருவரும் ஒன்றாக வாழ்வதும் உண்டு.சில காலம் சென்ற பின்னர் மீண்டும் அவர்களிடையே பிளவு ஏற்பட்டு நீதிமன்றம் செல்வதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் res judicata என்ற பாதுகாப்பை எடுக்க இடம்கொடுத்தால் குடும்பத்தில் பெரும் பிரச்சனை ஏற்படும்.

ஆகவே, பொதுவில் விவாகரத்து வழக்குகளுக்கு ரெஸ் ஜூடிகாட்டா செல்வதில்லை. இனி பிரிவிடல் வழக்கில் ரெஸ் ஜூடிகாட்டா உண்டா எனப் பார்ப்போம்.

## பிரிவிடல் வழக்குகளுக்கு ரெஸ்யூடிகாட்டா செல்லாது

பிரிவிடல் வழக்குக்கு மட்டும் விசேட நடவடிக்கை முறையுண்டு. இதன்படி வழக்கை தாக்கல் செய்தால் விளக்கம் நடைபெறல், இடைக்காலத் தீர்வையை வழங்குதல் மேன்முறையீடு செய்தல், இறுதி தீர்வையை வழங்குதல் வழக்கை தள்ளுபடி செய்தல் என்பன பிரிவிடல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள முறைப்படியே நடைபெற வேண்டும்.

சில வேளைகளில் பிரிவிடல் சட்டத்தில் கூறப்படாத ஒரு நடவடிக்கையை நீதிமன்றம் எடுக்கவேண்டுமானால் அதனை தன்னிச்சையான முறையில் எடுக்கமுடியாது. சிவில் நடவடிக்கை முறைக்கோவையில் இருந்தே எடுக்கவேண்டும் என பிரிவிடல் சட்டம் கூறுகிறது. ஆகவே பிரிவிடல் வழக்கிற்கு பிரிவிடல் சட்டமே நடைமுறைச் சட்டமாகும்.

சிவில் நடவடிக்கை முறைச் சட்டம் தேவைப்படும் போது உதவியுள்ள ஒரு சட்டமாகும். ஆகவே, பிரிவிடல் சட்டத்தில் உள்ள பிரிவை ஒதுக்கிவிட்டு அதற்குப் பதிலாக சிவில் நடவடிக்கை முறைச் சட்டப் பிரிவை எடுக்கமுடியாது.

பிரிவிடல் சட்டம் Res judicata பற்றி என்ன கூறுகிறது எனப் பார்ப்போம். பிரிவிடல் சட்டத்தின் 75 ஆம் பிரிவு பிரிவிடல் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கை நீதிமன்றம் எப்போது தள்ளுபடி செய்யலாம் என்று கூறுகிறது. பிரிவு 9,12,29,62,65 அல்லது 70 ஆகிய பிரிவுகளின் கீழேயே நீதிமன்றம் ஒரு பிரிவிடல் வழக்கை தள்ளுபடி செய்யலாம்.

ஏனைய சிவில் வழக்குகளைப் போல் எதிராளி பதில் அளிக்காவிட்டால் அல்லது தோற்றாவிட்டால் வழக்கை ஒரு முகமாக கேட்கவோ தள்ளுபடி செய்யவோ பிரிவிடல் வழக்கில் முடியாது. அப்படி செய்தால் இடைக்கால தீர்வை வழங்கிய பின்னர் மேன்முறையீடு செய்து அத்தீர்வையை ரத்துச் செய்துவிட்டு மீண்டும் வழக்கை விசாரிக்குமாறு கீழ் நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரலாம்.

மேலும், அவ்வாறு கீழ் நீதிமன்றத்தால் தள்ளுபடிசெய்யப்படும் வழக்குகளை மீண்டும் தாக்கல் செய்யலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் ரெஸ் ஜூடிகாட்டா என்ற பாதுகாப்பை எடுக்கமுடியாது. எடுத்துக்காட்டாக *டிங்கிரி அம்மா எதிர் அப்புஹாமி* என்ற வழக்கில் (72 புதுச்சட்ட அறிக்கை) நீதியரசர் சிரிமானே பின்வருமாறு கூறியுள்ளார்.

Where a partition action is dismissed in terms of Section 84 of the Civil Procedure Code on the ground of non appearance of the plaintiff on the trial data and without any adjudication of the plaintiffs on the right the order of dismissal would not as resjudicata in a subsequen action brought by the plaintiff for partition of the same land என்றாகும். அதாவது வழக்காளி ஒருவர் தாக்கல் செய்த பிரிவிடல் வழக்கின் விளக்கத் தினத்தன்று வழக்காளி நீதிமன்றத்திற்கு சமுகம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் அவ்வழக்கை சிவில் நடவடிக்கை முறை சட்டக்கோவையில் 84 ஆம் பிரிவிலுள்ளது போல் தள்ளுபடி செய்ய முடியாது.

பிரிவிடல் வழக்கில் வழக்காளியின் உரிமை ஆராயப்பட வேண்டும். பின்னர் வழக்காளி அதே காணி சம்பந்தமாக இன்னுமொரு பிரிவிடல் வழக்கை தாக்கல் செய்தால் அதற்கு resjudicata என்ற பாதுகாப்பு செல்லுபடியாகாது. ஆனால், இதனை விளங்காமல் சில வழக்குகளில் நீதிமன்றம் பிழையாக வழக்குகளை தள்ளுபடி செய்து சிக்கலுக்குள் மாட்டியும் உள்ளன. நீதியரசர் சிரிமானே.

**பிரிவிடல் வழக்கின் குணாம்சங்கள் ஏனைய சிவில் வழக்கில் இருந்து வேறுபடுவது ஏன்?**

சாதாரண சிவில் வழக்குகளுக்கு வழக்கெழு காரணம் ஒன்று தேவையாகும். இதை cause of action என ஆங்கிலத்தில் கூறுவர்.

இதனை வாசகர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். வழக்கெழு காரணம் என்பது வழக்காளிக்கு எதிராளியால் ஏற்பட்ட பாதிப்பு இது.

இது எதிராளியின் உரிமை ஒன்றை மறுப்பதாக இருக்கலாம். அல்லது ஏற்றுக்கொண்ட கடப்பாடு ஒன்றை நிறைவேற்றாமல்

இருக்கலாம். அல்லது கடமை ஒன்றை கவனயீனமாக கையாண்டதால் வழக்காளி பாதிப்புக்குள்ளாகி இருக்கலாம் என்பன உட்பட இன்னும் அதையொத்தனவாக இருப்பவையாகும்.

எடுத்துக்காட்டாக, விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்யும் ஒருவர் எதிராளி கணவனாக இருக்கலாம். அல்லது மனைவியாக இருக்கலாம்.

அவர் தத்தமது குடும்ப கடப்பாடுகளை நிறைவேற்ற தவறியுள்ளார் என்று கூறுவது மேற்படி வழக்கெழு காரணத்தை எடுப்பதற்கே யாகும். இவ்வாறு ஒவ்வொரு சிவில் வழக்கிலும் நிகழ்வுகளை வழக்குரைகளாக (pleading) கூறி வழக்கெழு காரணம் இருக்கின்றது என்று காட்ட வேண்டும். இல்லையேல் நீதிமன்றம் பிராதை ஏற்காது.

ஆனால், பிரிவிடல் சட்டத்தில் அத்தகைய வழக்கெழு காரணம் ஒன்று இருக்கிறது என்று காட்டத் தேவையில்லை. பிரிவிடல் வழக்கின் 4 ஆம் பிரிவு பிரிவிடல் வழக்கு பிராது ஒன்று எவ்வாறு இருக்க வேண்டும் என்று பின்வருமாறு கூறுகிறது:

1) வழக்கில் சம்பந்தப்பட்ட காணிக்கு பெயர் ஒன்று இருக்குமானால் அந்த பெயர் கூறப்பட வேண்டும்.
2) காணியின் எல்லைகள், பௌதீகத்தன்மை, விஸ்தீரணம் என்பன வரைபடம் மூலம் காட்டப்படல் வேண்டும்.
3) காணியில் உரித்து உடையவர்கள் யார் யார் என்பதும் அக்காணியை அபிவிருத்தி செய்பவர் யாராவது இருந்தால் அவர்கள் யார் யார் என்பதும் வழக்காளிக்கு தெரிந்திருந்தால் அவை பிராதில் குறிப்பிட வேண்டும்.
4) வழக்காளிக்கு அக்காணியில் உரிமை வந்த பரவணிப்பட்டியல் உடன் ஏனைய எதிராளிகளுக்கு உரிமை வந்தமுறை தெரிந்திருப்பின் அப்பட்டியலும் இணைக்கப்பட வேண்டும்.

ஆகவே, சிவில் நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் பிராதுக்கும் பிரிவிடல் சட்டத்தின் பிராதுக்கும் குணாம்சத்தில் வேறுபாடு உள்ளது.

பிராதைப்போல் வழக்கில் எதிராளி வழக்காளி என்ற வேறுபாடு பிரிவிடல் வழக்கில் இல்லை. வழக்காளி வழக்கை தொடர்ந்து நடத்தமுடியாமல் இருந்தால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்ய முடியாது.

அதற்கு மாறாக, எதிராளிகளில் ஒருவரை வழக்கை ஏற்று மேற்கொண்டு செல்லுமாறு கட்டளையிடலாம். எதிராளியையே lispendens ஐ பதியுமாறு கூறலாம்.

இதேபோல், இன்னும் பல வேறுபாடுகள் உள்ளன. பிரிவிடல் வழக்கில் வழக்கெழு வினா என்ற ஒன்று இல்லை. வாசகர்கள் பலர் அறிந்திருக்கலாம்.

சிவில் வழக்கு ஒன்றில் விளக்கத்திற்கு முன்னர் வழக்காளியின் சட்டத்தரணியும் எதிராளியின் சட்டத்தரணியும் தத்தமது பக்கத்துக்குச் சார்பாக தீர்ப்புக்களை பெறுவதற்கு தேவையான வழக்கெழு வினாக்களை எழுப்புவதை கண்டும் கேட்டும் இருக்கலாம்.

இந்த வழக்கெழு வினாக்களுக்கு நீதிபதி கூறும் விடைகளை பொறுத்தே தீர்ப்பு இருக்கும். வழக்காளிக்குச் சார்பாக கூடுதலான விடைகள் கிடைக்குமாயின் அவர் அவ்வழக்கில் தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெறுவார்.

அதேபோல், எதிராளிக்கு சார்பாக கூடுதலான விடைகள் கிடைக்குமாயின் அவர் அவ்வழக்கில் தனக்கு சாதகமான தீர்ப்பை பெறுவார். வழக்கெழு வினாக்கள் எழுப்பப்படுவது இதற்காகவேயாகும்.

ஆனால் பிரிவிடல் வழக்கில் வழக்கெழு வினாக்கள் எழுப்ப வேண்டும் என்ற நியதியில்லை. விரும்பின் வழக்கெழு வினாவை எழுப்பலாம். நடைமுறையில் வழக்கெழு வினாக்கள் எழுப்பப்படுவது வழக்கம். ஆனால் கட்டாயம் இல்லை. அதேபோல் சிவில் வழக்குகளில் வழக்காளியும் எதிராளியும் ஒத்துக்கொள்ளும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வழக்கின் தீர்ப்பை வழங்கலாம். ஆனால், பிரிவிடல் வழக்கில் அவ்வாறு செய்ய முடியாது என உயர் நீதிமன்றத்தின் முழுநிலை (full bench) நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் பின்வரும் வழக்கில் தீர்த்துள்ளது. *மேதர் எதிர் தாமோதரம்* என்ற வழக்கு 1903 ஆம் ஆண்டு நடைபெற்றது. 6 புதுச்சட்ட அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. முழு நிலை நீதியரசர்கள் தமது தீர்ப்பில் கூறியுள்ளதாவது: பிரிவிடல் வழக்கில் யார் யாருக்கு காணியின் உரித்து உள்ளது என்பதை பற்றி நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களின் விருப்பும் வெறுப்பு நீதிபதிக்குத் தேவையில்லை.

ஆவணங்களை பரிசீலனை செய்து அவரே தீர்மானிக்க வேண்டும். வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களின் விருப்பு வெறுப்பு நீதிபதிக்கு தேவையில்லை. ஆவணங்களைப் பரிசீலனை செய்து அவரே தீர்மானிக்க வேண்டும்.

நீதிபதியின் தீர்ப்பு வழக்கின் தரப்பாரை மட்டும் கட்டுப்படுத்தாது. முழு உலகையும் கட்டுப்படுத்தும் தீர்ப்பாகும். (Rem)ஆகவே நீதிபதி மிகக் கவனமாக தீர்ப்பை வழங்க வேண்டும்.

இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில், நீதிபதியின் தீர்ப்பு கட்சிக்காரரை மட்டுமன்றி முழு உலகையும் கட்டுப்படுத்துவதால் சிலர் ஒன்று சேர்ந்து வழக்காளியாகவும்

எதிராளியாகவும் வந்து சூழ்ச்சியாக சில காணிகளை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வசதியுண்டு.

இதனால், உண்மையாக உரித்துள்ளவர்கள் பாதிக்கப்பட இடமுண்டு.

ஆகவே நீதிபதி மீது சுமத்தப்பட்டுள்ள சுமை மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். அதற்கமைய நீதிபதி உறுதிகளை பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கூறியது.

இவ்விடத்தில் நீதிபதிகளை எதிர்நோக்குகின்ற ஒரு பிரச்சினை பற்றி *தியாகராசா எதிர் அருணோதயம்* என்ற வழக்கில் முன்னாள் பிரதம நீதியரசரான ஜி.பீ.எஸ்.டீ.சில்வா அவர்களும் குணவர்த்தன நீதியரசர் அவர்களும் சுட்டிக்காட்டியது என்னவெனில் பொய்யானதும் பிழையானதுமான உறுதிகளை நீதிபதிகள் எப்படி நம்பி தீர்ப்பை வழங்கலாம் என்பதாகும்.

மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் படி நிறைவேற்றப்பட்ட உறுதி ஒன்றானால் பிழையான திகதியையும் பொய்யான திகதியையும் கொண்ட உறுதியானாலும் அதனை ஏற்று பரிசீலிக்கலாம் என அவர்கள் நீதிமன்றுக்கு ஆலோசனை கூறினர். ஆனால் வஞ்சனையாக அல்லது மோசடியாக அவ்வுறுதி எழுதப்படவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு நொத்தாரிசினுடையதாகும் என்றும் கூறப்பட்டது.

**இறுதியாக…..**

ஆகவே பிரிவிடல் வழக்கின் குணாம்சங்கள் சிவில் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் இருந்து வேறுபடுவதால் சிவில் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 34,207,406 ஆம் பிரிவுகளின் கீழ் சொல்லப்பட்டுள்ள நீதி கண்ட வழக்கு என்ற சித்தாந்தம் பிரிவிடல் வழக்குக்கு எடுக்க முடியாது.

இதனை பிரிவிடல் வழக்கின் நடவடிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

பிரிவிடல் வழக்கில் அவ்வாறு கூறாது இருந்தால் சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் மேற்படி பிரிவுகளை எடுத்திருக்கலாம்.

வெளிப்படையாகவே பிரிவிடல் சட்டத்திலும் நீதிமன்றத் தீர்ப்புக்களிலும் பிரிவிடல் வழக்கு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டாலும் பின்னர் அவ்வழக்கை தாக்கல் செய்ய ரெஸ் ஜூடிகாட்டா தடையாக இருக்காது என்று நீதியரசர் சிரிமானே அவர்கள் கூறியது கவனத்தில் கொள்ளற்பாலது எனலாம்.

Xxxxxxxx

**04**

## கொடை அளிக்கப்பட்ட காணி ஒன்றை கொடை அளித்தவர் மீளப் பெறலாமா?

கொடை என்பதற்கு உரோம சட்ட அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை கொடுத்துள்ளனராயினும் அவர்களிடயே பொதுவான கருத்து ஒன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கொடை என்பது எந்தவித பிரதி உபகாரம் எதிர்பாராமல் அன்பினாலும் கருணையினாலும் பட்சத்தினாலும் இன்னுமொருவரின் முன்னேற்றத்திற்காக வழங்கப்படும் செயலாகும்.

சில சந்தர்ப்பங்களில் கொடைகள் தமது உறவினர்களின் நன்மைக்காக உதாரணமாக விவாகம் செய்யும் போது

இளந்தம்பதிகளின் நல்வாழ்வுக்காக இக் கொடைகள் பொதுவாக வழங்கப்பட்டாலும் ஒருவர் புரிந்த சேவைக்காகவும் இக் கொடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் ஒருவர் இறக்கப்போகும் சந்தர்ப்பத்திலும் இக் கொடை வழங்கப்படுகிறது.

இலங்கையில் நடைபெற்ற *Affefudeen vs Peryathamby* என்ற வழக்கொன்றில் ஒருவர் தனது சொந்தப் பணத்தால் இன்னுமொருவரிடமிருந்து காணி ஒன்றை வாங்கும் போது வாங்குபவர் தனது பெயரைக் குறிப்பிடாமல் தனது பிள்ளைகளின் பெயரை குறிப்பிட்டு காணியை வாங்கினால் அந்தக் காணியின் சொந்தக்காரராக பணத்தைக் கொடுத்தவர் வரமுடியாது என்று அந்தப் பிள்ளைகளே காணிக்கு உரித்தாளர் ஆகிறார்கள் என்றும் ஏனெனில் அந்தக் காணி வாங்கல் ஒரு உரித்து மாற்று என்று கூற முடியாது என்றும் பெயர் குறிக்கப்பட்டவர்களுக்கு கொடை அளிக்கப்பட்டது என்றே கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

ஆகவே கொடைகள் பல விதமாக இருக்கிறது. இலங்கையில் வழங்கப்படும் கொடைகள் பல்வேறு வகைப்பட்டனவாக இருக்கின்றன. அவற்றுள் சில பின்வருவனவாகும்.

1. கொடை வழங்குபவர்களின் சீவிய உரித்துக்கு உட்பட்டு கொடை வழங்குதல்.

2. விவாகம் ஒன்றுக்கு வழங்கப்படும் கொடைகள்

3. கொடையை இரத்துச் செய்யும் உரிமையுடன் வழங்கப்படும் கொடைகள் நிபந்தனையுடன் வழங்கப்படும் கொடைகள்.

4. இறப்பை எதிர் பார்த்து வழங்கும் கொடைகள்

5. புத்தி குறைந்தவர்களால் (Unsound Mind) வழங்கப்படும் கொடைகள்.

6. இளம் பருவத்தினால் (Minors) வழங்கும் கொடைகள்

என்பன அவற்றுள் சிலவாகும். மேற்படி கொடைகளை பற்றி ஓரளவு விளக்கத்தைப் பெற்றுக் கொண்ட இன்றைய கட்டுரையின் விடயப்பொருளான கொடையளிக்கப்பட்ட காணி ஒன்றை மீளப் பெறலாமா? என்ற விடயத்தை ஆராய்வோம்.

## I. கொடை வழங்குபவரின் சீவிய உரித்துக்கு உட்பட்டு கொடை வழங்குதல்

இக் கொடையின் கீழ் ஒருவர் கொடையளிக்கும் போது கொடையைப் பெறுபவர் கொடை அளித்தவர் இறக்கும் வரையில் சுதந்திரமாக எதையும் செய்ய முடியாது. உதாரணமாக கொடையைப் பெறுபவர் தனக்கு விருப்பம் போல் தான் பெற்ற கொடைக் காணியை இன்னுமொருவருக்கு விற்கவோ மாற்றவோ கொடை அளிக்கவோ முடியாது. அப்படிச் செய்யவேண்டுமானால் கொடை கொடுத்தவரின் அனுமதியும் தேவை. அவரது ஒப்பமும் தேவை. ஆகவே இதன் கீழ் உண்மையான கொடை ஒன்று நடைபெறுவதில்லை என சிலர் விமர்சிப்பதுண்டு.

ஆயினும் சீவிய உரித்தை வைத்துக் கொண்டு கொடை கொடுப்பவர் எந்த நேரத்திலும் தனது சீவிய உரித்தை வாபஸ் வாங்கலாம். ஒரு பிரகடன உறுதியை எழுதி அதன் மூலம் சீவிய உரித்தை வாபஸ் அல்லது மீளப் பெறலாம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

**ii. விவாகம் ஒன்றுக்கு வழங்கப்படும் கொடைகள்**

சாதாரண கொடை உறுதியை போன்ற சுயரூபத்திலேயே விவாக உறுதிகளும் எழுதப்படுகின்றன. இதில் விவாகம் செய்யப் போகின்றவர்களின் விபரம் கூறப்பட வேண்டும். இந்த கொடை உறுதிகளை நிபந்தனைக்குட்பட்ட கொடை உறுதி எனவும் அழைக்கலாம். ஏனெனில் விவாகத்தை எதிர் பார்த்து இக் கொடையை வழங்குவதால் ஒரு பகுதியார் விவாகத்தை இரத்துச் செய்யும் போது கொடை கொடுத்தவரால் அவரது கொடையை இரத்துச் செய்ய முடியும். ஏனெனில் விவாக நிபந்தனையை அவர் மீறியதால் இவ்வாறு செய்ய முடிகிறது. வோல்டர் பெரேரா அவர்கள் சட்ட அறிவு நிரம்பியவர். ஆனால் சட்டவியலாளர் அல்லர். பின்வருமாறு கூறுகிறார். “A gift made in Consideration of marriage has to be Restored in the Event of Marriage Does not take Place என்கிறார்

விவாகத்தை தூண்டுவதற்காகவே விவாக கொடைகள் வழங்கப்படுகின்றன. ஆகவே விவாகம் நிலைத்திருக்கும் போது ஏனைய காரணங்களுக்காக அக் கொடையை திரும்பப் பெற முடியாது என்றும் நீதிமன்ற அனுமதித் தேவை என்றும் *பொன்னம் பெரும எதிர் குணசேகர* வழக்கில் தீர்க்கப்பட்டது.

**iii. கொடையை இரத்துச் செய்யும் நிபந்தனையுடன் வழங்கப்படும் கொடைகள்.**

கொடையானது மீளப்பெற முடியாது என்பதே பொது விதியாகும். ஆனால் இலங்கையில் இக்கொடைகள் மீளப் பெறலாம் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுவதுண்டு. இதன்படி கொடை பெற்றவரின் அனுமதியில்லாமல் அக்கொடையை இரத்துச் செய்து உறுதிகளை எழுதுவதுண்டு.

இதன் கீழ் பலர் மேற்படி நிபந்தனைக்கு உட்பட்ட கொடை உறுதியை இரத்துச் செய்வதாகவும் கூறி புதிய பிரகடன உறுதியை எழுதுவது நடை முறையில் உண்டு. பல வழக்குகளில் இது ஆராயப்பட்டது.

ஒரு வழக்கில் கூறப்பட்டது என்னவெனில் கொடையில் இருவர் சம்பந்தப்படுவதுண்டு. ஒருவர் கொடை அளிப்பவர், மற்றவர் கொடையைப் பெறுபவர். ஆகவே இருவர் சம்பந்தப்பட்டு ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போது ஒருவர் மட்டுமே அதாவது கொடையை கொடுப்பவர் மட்டுமே அதனை ஒரு பட்சமாக இரத்துச் செய்வது ஒப்பந்தச் சட்டத்தின் படியும் இயற்கை நீதியின் படியும் செல்லுபடியாகுமா? என ஆராயப்பட்டு அவ்வாறு செய்ய முடியாது என தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் கொடைகளின் தன்மைக்கும் நிகழ்வுகளுக்கும் ஏற்ப நீதிமன்றம் சென்று கொடையை இரத்துச் செய்யும் கட்டளையை பெறுவதே சாலச் சிறந்தது.

### iv. இறப்பை எதிர்பார்த்து வழங்கும் கொடைகள்

இதனை Donate mortis Causa என அழைப்பர். இதன்படி மரணம் ஒன்றை எதிர் பார்த்து ஒருவர் இன்னுமொருவருக்கு வழங்கும் கொடையாகும். இங்கு சொத்துக்கள் உண்மையாக வழங்கப்படுவதில்லை. ஆவணம் மட்டுமே வழங்கப்படுகிறது. (குரோசியஸ் 03.02.22 ) இந்த கொடையை வழங்கியவர் இறக்காவிட்டால் அக் கொடையை அவர் மீளப் பெறலாம். சில வேளை கொடையை வழங்கியவர் இறக்க முன்னர் கொடையை பெற்றவர் இறந்து விட்டால் அந்த கொடை வெறுமையாகும்.

வால்டர் பெரேரா சட்ட எழுத்தாளர் கூறுவது என்னவெனில், ஆங்கிலச் சட்டத்தில் மேற்படி கொடை மரணத்தை எதிர் பார்த்து வழங்கப்படுவது என்றும் சில வேளைகளில் கொடை

வழங்கியவர் இறக்காவிட்டால் எந்த நேரத்திலும் அதனை மீளப் பெறலாம் என்றும் தெரிவிக்கின்றார்.

மேற்படி கொடைகள் உரோம டச்சு சட்டப்படி கணவன் மனைவியருக்கிடையில் நடைபெற உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதில் தெளிவாக ஏன் இக் கொடை வழங்கப்படுகிறது என்பது கூறவேண்டும். இறக்கப்போகிறேன் அல்லது இறப்பதற்கு உரிய சூழ்நிலை இருக்கிறது என தெளிவாகக் காட்ட வேண்டும். சாதாரணமான வாக்கியங்களால் கூறுவது இப் பகுதிக்குக் கொடைக்கு வராது என்றும் அது Inter vivos என்ற பிரிவுக்குள் வரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## V. புத்தி குறைந்தவர்களால் (unsoundmind) வழங்கப்படும் கொடைகள்.

உரோம டச்சு சட்டத்தின் படி பித்துப்பிடித்தவர்களால் வழங்கப்படும் கொடைகள் வெறிதானது (void) ஏனெனில் கொடை வழங்குபவர் தான் செய்யம் காரியம் சரியா? பிழையா? எனப்பகுத்தறிய முடியாதவராக இருப்பதேயாகும். ஆனால் ஆங்கிலச்சட்டத்தில் கொடையளித்தவர் ஒரு விடயத்தை புரிந்து கொள்ளக் கூடியநிலையில் இல்லை என்று தெரிந்து கொண்டும் ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அத்தகைய ஒப்பந்தம் வெறிது ஆகாது வெறிதாக்கப்பட வேண்டும். (Voidable) ஏனெனில் ஒருவர் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும்போது அவர் அதன் தன்மையை உணரக்கூடிய நிலையில் இருக்கவில்லை என்பதை மறுதரப்பினர் நிரூபிக்க வேண்டும் என்பதினாலாகும். உதாரணமாக ஒருவர் தனது உடன் பிறப்புகளுக்கு அல்லது பெற்றோர்களுக்கு ஒரு

கொடையை வழங்கும்போது அதன் தன்மையை உணராமல் அதை வழங்குகிறார் என்று கூறுவது கஷ்டம் என்பதாலாகும். இது பற்றி *சொய்சா எதிர் சொசா* என்ற வழக்கில் ஆராயப்பட்டது. அதில் இறுதியாக கூறப்பட்டது என்னவெனில் (Every Case must depend upon its Particular facts)என்றாகும்.

## vi. இளம் வயதினர் வழங்கும் கொடைகள்

சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் பிரிவுகளின் கீழ் ஒரு இளம் வயதினரின் பாதுகாவலனாக நியமிக்கப்படாத ஒருவரின் உதவியுடன் வழங்கப்படும் இளம் வயதினரின் கொடை வெறிதானது (Void) *குணசேகர ஹாமினி எதிர் டொன் பாரன்* என்ற வழக்கில் தீர்க்கப்பட்டது.

பொற்றோர் செயற்கை பாதுகாவலன் என்ற அந்தஸ்துக்குள் வரவில்லை என் தீர்க்கப்பட்டது. அவர்கள் இயற்கைப் பாதுகாவலர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இதுவரை கூறியவற்றில் இருந்து கொடைகள் பல வகைப்படும் என்று கண்டுகொண்டோம். இனி அளிக்கப்பட்ட கொடையை மீளப் பெறலாமா?எனப் பார்ப்போம்.

## கொடை மீளப்பெறுதல்

பொதுவாக கொடையை மீளப்பெற முடியாது. ஆனால் அதற்குப் புற நடைகள் உண்டு. அவையாவன,

1. நன்றி இல்லாமை (ingratitude) அன்பு இல்லாமை.
2. வழியுரிமைச்சட்டத்தின் கீழ் பிள்ளை ஒருவர் பெற வேண்டிய பங்கைப் பெற முடியாமல் கொடை வழங்குதல்
3. குழந்தைகளுக்கு வழங்குவதை விட மற்றவருக்கு கூடுதலாகக் வழங்கியமை.

இவற்றில் முக்கியமான ஒன்று இல்லாமை. அன்பு இல்லாமை ஆகும் இதனை விரிவாக ஆராய்வோம். இதன் கீழ்கொடை ஒன்றை வாபஸ் பெற வேண்டுமானால் நீதிமன்றம் செல்லுதலே உசிதமானது. Ingratitiude என்பது பரந்த பொருளில் வழங்கப்படுகின்றது. சமூகத்திற்கு சமூகம் வேறுபட்ட நிலைகளில் வழங்கப்படுகிறது. தீர்ப்புக்களை பார்ப்போம்.

ராம் றிப்போட்டில் குறிக்கப்பட்டுள்ள ஒரு வழக்கில் வழக்காளி தனது சகோதரியின் மகனுக்கு ஒரு வீட்டையும் காணியையும் கொடையளித்தாள். அந்தக் கொடையில் வழக்காளி தனது சீவியம் நிலைத்திருக்கும் வரையும் அவ் வீட்டில் வாழ்வதற்கான உரிமையைக் கொணடிருப்பதாக நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. வழக்காளி தனது செலவில் மேற்படி சகோதரியின் மகளைப் படிப்பித்ததுடன் மேற்படிப்பையும் பெற்றுக்கொடுத்து அதனுடன் அதே வீட்டில் வசித்து வந்தாள். ஆனாலும் சில காலத்தின் பின்னர் கொடையைப் பெற்றவர் தகாதவர்களை வீட்டுக்கு கூட்டி வருவதும் ஒழுக்கக்கேடாக நடக்கவும் தொடங்கினார். மதிப்புடன் வாழும் பெண் ஒருவர் வாழ முடியாத நிலைக்கு அந்த வீடு வந்தது வழக்காளி வீட்டினின்றும் வெளியெறி தான் கொடையளித்த வீட்டைப் பெற வழக்கைத் தாக்கல் செய்தாள். நீதிமன்றம் விசாரணையின் பின்னர் பின்வருமாறு தீர்த்தது. கொடை பெற்றவனின் ஒழுக்கக்கேடான நடத்தைக்கு காரணமாக மானமும் நாணமும் உள்ள பெண் ஒருவர் அந்த வீட்டில் வாழ முடியாது. ஆகவே வழக்காளி அக் கொடையைத் திருப்பி பெற உரித்துடையவள் என தீர்க்கப்பட்டது.

*கரோலிஸ் எதிர் டொன் டாவித்* என்ற வழக்கில் கொடையுறுதியில் கொடை பெற்றவர் பண்பாக நடக்க வேண்டும் என்று குறிக்கப்பட்டு இருந்தது. இதற்கு மாறாக அவர் நடந்தால் கொடையை மீளப்பெறலாம் என தீர்க்கப்பட்டது. இன்னுமொரு வழக்கில் தாயானவள் மகனுக்கு

ஒரு வீட்டைக் கொடை அளித்திருந்தாள் பின்னர் மகன் தாயை "Whore" (பண்பான சொல் பரத்தை கெட்ட சொல்லொன்றும் உண்டு) என அழைத்தாள் தாய் தனது மகன் நன்றி மறந்தவன் என்று கூறி கொடையை இரத்துச் செய்ய வழக்கைத் தாக்கல் செய்தாள். ஆனால் நீதிமன்றம் அந்த சொல் மட்டும் கொடையை மீளப்பெற போதுமானதல்ல என்று கூறியது.

சஞ்சி என்ற பழைய வழக்கொன்றில் உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் கொடை அளிக்கப்பட்ட ஒரு வீட்டை நன்றியின்மை (Ingratitude) அன்பு இன்மை என்ற வகைக்குள் கொண்டுவர முடியாது என்றும் அதனை இரத்துச் செய்யுமாறு கோர முடியாது என்றும் தீர்க்கப்பட்டது. கொடை பெற்றவர் நன் நோக்குடன் எந்த வஞ்சனையும் செய்யாமல் பராமரித்து வருவதால் நன்றியின்மை என்று கூறமுடியாது என்றது.

சிவகாசிப்பிள்ளை vs அந்தோனிப்பிள்ளை என்ற வழக்கில் விவாகமான பெண் ஒருத்தி தனது கணவனுக்கெதிராக ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தாள். தன்னால் கணவனுக்கு கொடையளிக்கப்பட்ட கொடையை இரத்துச் செய்யுமாறும் ஏனெனில் தன்னையும் தனது பிள்ளைகளையும் வீட்டை விட்டு துரத்தி விட்டதாகவும் முறைப்பாடு செய்திருந்தாள். இச் செயலால் தனக்கு வழக்கெழு காரணம் எழுந்ததாகவும் முறையிட்டாள். சூட்ஸ் நீதியரசர் வழக்கை விசாரித்து பின்வருமாறு தீர்ப்பளித்தார். மேலே வழக்காளியால் கூறப்பட்ட காரணம் அதாவது வழக்காளியையும் பிள்ளைகளையும் வெளியேற்றியது நன்றியின்மைக்குள் வராது என்றும் உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் அக் கொடையை மீளப்பெற முடியாது என்று தீர்த்தார்.

கொடை அளிக்கப்பட்ட உறுதியை மீளப்பெற முடியாது என்பதற்கு சாதகமான தீர்ப்புக்களே அதிக அளவில் உள்ளன. உதாரணமாக சீவிய உரித்துக்கு உட்பட்டு ஒருவர் கொடை

அளிக்கிறார் என வைத்துக் கொள்வோம். இந் நிலையில் கொடையைப் பெறுபவர் அந்த சொத்தை விற்கவோ வேறு ஒரு சொத்துடன் பரிவர்த்தனை செய்யவோ தன் குழந்தைகளுக்கு கொடை அளிக்கவோ முடியாது. அதன் பின்னர் கொடை அளித்தவர் அக் கொடையை மீளப் பெற வழக்கைத் தாக்கல் செய்கிறார் எனவும் வைத்துக் கொண்டால் அது அர்த்தமற்ற செயல் ஒன்றாகவே அமையும். ஏனெனில் பெயருக்கே அந்த சொத்து கொடையளிக்கப்பட்டது. உண்மையில் கொடையளித்தவரின் நிலையில் மாற்றம் இல்லை. மேலும் கொடை ஒன்றை வழங்கும் போது கொடை அளிப்பவரும் கொடையைப் பெறுபவர் தான் நன்றியுடன் இதனை ஏற்றுக் கொள்வதாக கூற வேண்டும். இரு மனமும் ஒத்து இச் செயல் நடைபெறுகிறது. அப்படி இருக்கையில் ஒருவர் மட்டும் நீதிமன்றம் சென்று கொடையை இரத்துச் செய்ய சில காரணங்களை கூறினால் நீதிமன்றம் இலகுவில் அதனைச் செய்யாது என்பதையே அது காட்டுகிறது. ஆயினும் நன்றியின்மையை தெளிவாக காட்டினால் மட்டுமே நீதிமன்றம் கொடையை இரத்துச் செய்யும் பின்வரும் வழக்கு நல்லதொரு உதாரணம் மட்டுமல்ல மிகச் சமீப வழக்குமாகும் என்பதால் சகலரும் அறிதல் நன்று.

## டோனா பொடி நோனா ரண வீரமெனிக்கே

*ரோஹினி எதிர் சேனா நாயக்க டோனா பொடி நோனா ரணவீர மெனிக்கே*, எட்மன்ட் பெரேரா சேனா நாயக்க என்பவரை மணந்தாள். அவர்களுக்கு ரோஹினி செனா நாயக்க என்ற பெண் குழந்தை ஒன்று இருந்தது. இவர்கள் (பெற்றோர்) இருவரும் அபல தெனிய தோட்டத்தை தமது மகளான ரோஹினிக்கு சீவிய உரித்துக்குபட்டு கொடை அளித்தனர். இந்தக் கொடை விவாகத்தின் பொருட்டு வழங்கப்பட்டது. இவள் யசரத்னபெரேரா என்பவரை மணந்தாள். யசரத்ன பெரேரா இந்த கொடையில் கூட்டு கொடை பெறுநர் (Co Donee)ஆவார். ரோஹினியினதும்

யசரத்ன பெரேராவினதும் விவாகம் பின்னர் விவாகரத்துக்குள்ளானது. ரோஹினி தனது பெற்றோரை தாக்கி காயப்படுத்தியதுடன் தொடர்ந்தும் தாக்கி கொண்டு வந்தாள் இதனால் பெற்றோர் இருவரும் ரோஹினிக்கு எதிராகவும் அவளது மாஜி கணவனுக்கு எதிராகவும் வழக்கைத் தாக்கல் செய்து நன்றியின்மையின் கீழ் கொடையை இரத்துச் செய்யும் படி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தார்கள். மாவட்ட நீதிமன்றம் "நன்றியற்ற செயல்" தெளிவாக தெரிகிறது என்று கூறி கொடையை இரத்துச் செய்தது ரோஹினி இத் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்தாள். மேன் முறையிட்டு நீதி மன்றம் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்தது. ஏனெனில் கொடையின் பயனாகவே விவாகம் நடந்தது என்றும் ஆகவே அக் கொடை இரத்துச் செய்ய முடியாது என்றும் எப்படியிருப்பினும் இக் கொடை (Ingratitude) கீழ் வராது என்றும் தீர்த்தது.

பெற்றோர் இத் தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்தனர். நீதியரசர் அமரசிங்க தீர்ப்பை வழங்கினார். மேற்படி கொடை பெற்றோர் தனது பிள்ளையின் வளர்ச்சிக்காகவே வழங்கினர். விவாகம் செய்வதற்கு தேவையான தூண்டுகோலாக அது இருக்கவில்லை என நிகழ்வுகளில் இருந்து தெரிய வருகின்றது. ஆகவே இது "Donatio Proper Nuptias" என்ற வகைக்குள் வராது இது சாதாரண கொடைக்குள்ளேயே வரும். ஆகவே நன்றியின்மையை காட்டி இக் கொடையை இரத்துச் செய்யலாம் என்று தீர்ப்புக் கூறினார். மேலும் கொடையை மீளப் பெறுதல் சுயேச்சையாக நடைபெற முடியாது. அதற்கு நீதிமன்றத்தில் அனுமதி தேவை என்று கூறினார. இந்த வழக்கில் ரோஹினி தனது பெற்றோரைத் தாக்கியதன் மூலம் தனது எதிர்பார்பைக் காட்டியுள்ளார். நன்றியின்மையையும் காட்டியுள்ளார். நன்றியின்மையானது ஒரு செயலிலும் இருக்கலாம். பல செயல்களிலும் இருக்கலாம். நீதிமன்றம்

திருபப்திப்படும் அளவிற்கு அதனை நிரூபிக்கவேண்டும் என்று கூறினார். ஆகவே வழக்குக்கு வழக்கு நன்றியின்மையின் கீழ் கொடையை மீளப்பெறலாம் என்றார். நீதிமன்றம் திருப்திப்படும் அளவிற்கு அந்த நன்றியின்மைச் செயல்கள் இருக்கவேண்டும் என்றும் அது ஒரு செயலாக இருக்கலாம் அல்லது பல செயல்களாக இருக்கலாம். கொடை பெற்றவரின் உள் மனதில் என்ன இருக்கிறது என்பதும் செயல்களால் காட்டப்பட வேண்டும் என்றும் கூறலாம். பொதுவாகக் கூற்றின் கொடை ஒன்றில் இருவர் சம்பந்தப்படுவதால் ஒருவர் தன்னிச்சையாக கொடையை மீளப் பெற முடியாது என்றும் மீளப்பெற வேண்டுமானால் அதற்குரிய காரணங்களை கூறி நீதிமன்றத்தை திருப்திப்படுத்தி கட்டளையைப் பெற வேண்டும் என்பதாகும்.

இனி கொடை ஒன்றை ஏற்றுக்கொள்ளும் முறை பற்றி பார்ப்போம். கொடையை ஏற்றுக் கொள்ளல் கொடையானது கொடை பெறுபவர் அதனை ஏற்றுக் கொள்ளும் வரை நிறைவு பெற்றதாக கொள்ள முடியாது. ஆனால் ஏற்றுக் கொள்ளுதலை காட்டுவதற்கு உறுதியில் கொடை பெறுபவர் கையொப்பம் இட வேண்டும் என்பது கட்டாயமல்ல. அதே போல் அவரிடமிருந்து உறுதிக்கடிதமோ அல்லது வேறு என்ற வழியிலோ அதனை உறுதிப்படுத்தும் முறைகளோ தேவையில்லை. ஆயினும் கொடையாளியின் எண்ணம் அக் கொடையைப் பெற விருப்பமுடையவராக இருந்தார் என்பதை அவர் மூலம் தெளிவாக காட்ட வேண்டியது முக்கியமாகும். ஏனெனில் கொடையாளி அதனை ஏற்றுக் கொள்வதற்கிடையில் கொடை அளிப்பவர் கொடையை மீளப்பெறலாம் என்ற அபாயம் இருக்கிறது.

ஏற்றுக் கொள்ளல் வசனத்தால் மட்டுமன்றி செயலாலும் நடைபெறலாம். கொடையைப் பெறுபவர் உறுதி எழுதும்போது அவ்விடத்தில் இல்லையாயினும் பின்னர் அதனை ஏற்றுக் கொள்ளலாம். உறுதி எழுதுகின்ற நொத்தாரிஸ்

அவர்களும் அக் கொடையை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது வேறு ஒருவர் ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு விசேட ஏற்பாடுகள் தேவையில்லை.

கொடை பெறுபவர் பின்னரும் அதனை சரிப்படுத்தலாம் என்பது உண்மையாயினும் அவர் இறப்பதற்கிடையில் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவ்வாறு ஏற்கும் உரிமை அவரது குழந்தைகளுக்கு அல்லது வழி உரிமையாளருக்கு செல்வதில்லை. அவர் இறந்தால் கொடை மீண்டும் கொடை அளித்தவரிடமே சென்று விடும்.

சில சந்தர்ப்பங்களில் கொடையை ஏற்பது சில நடத்தைகளை கொண்டும் ஊகிக்கலாம். உதாரணமாக கொடை அளிக்கப்பட்ட காணியில் குடியேறும்வதன் மூலம் இதனை காட்டலாம். உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் இயற்கைப் பாதுகாவலன் வயது வராத ஒரு குழந்தையின் சார்பில் கொடையை ஏற்கலாம்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தை கூற வேண்டும். கொடை அளிப்பவரே கொடை பெறுவர் சார்பில் கொடையை ஏற்கக்கூடாது. ஏனெனில் கொடை ஒரு ஒப்பந்தமாகும். ஆகவே ஒப்பந்தத்தில் இருவர் இருக்க வேண்டும். ஆகவே கொடுப்பவரும் ஏற்பவரும் ஒருவராக இருக்க கூடாது.

*டீ சில்வா எதிர் ஒன்றாட்சி* என்ற வழக்கில் கொடையை ஏற்றுக் கொள்ளல் என்பது ஒரு நிகழ்வை நிரூப்பதற்கே. கொடையை பெற்றவர் அதனைப் பெற்றுக்கொண்டார் என்பதை காட்டவேயாகும். அதனை உரித்துடன் இணைக்கக் கூடாது எனத் தீர்க்கப்பட்டது. Acceptance of a Donation is a matter of Proof and it is not necessary to Allege It in a Pleading As Link of title.

## தொகுப்புரை

- கொடைக்கு இருவர் இருக்க வேண்டும். ஒருவர் கொடை அளிப்பவராகவும் மற்றவர் கொடையை பெறுபவராகவும் இருக்க வேண்டும்.
- கொடை நிபந்தனையுடன் வழங்கப்படலாம். நிபந்தனையை மீறும் பட்சத்தில் அதனை இரத்துச் செய்யலாம்.
- அன்பு பட்சம் கருணை என்பவற்றால் வழங்கப்படும் கொடைகள் மீளப் பெற வேண்டுமானால் நீதிமன்றம் சென்று அதனை நிரூபித்து பெற வேண்டும்.
- விவாகத்தின் பொருட்டு வழங்கப்படும் கொடையை இலகுவில் மீளப்பெற முடியாது.
- கொடையை மீளப் பெற வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய இடம் காணி அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றமாகும்.
- கொடை இறப்பை எதிர் பார்த்து வழங்கப்படலாம்
- இறப்பு நடைபெறாவிட்டால் அக் கொடை மீண்டும் அளித்தவருக்கே சென்று விடும்.
- கொடையை கட்டாயமாக கொடை பெறுபவர் ஏற்கவேண்டும். அவரால் அல்லது அவரது பிரதிநிதியால் ஏற்பட வேண்டும். கொடை ஏற்கப்படும் வரை கொடை அளிப்பு நிறைவு பெறாது.

- குழந்தைகளில்லாத ஒருவர் கொடை அளித்தால் பின்னர் கொடை அளித்தவருக்கு குழந்தைகள் பிறந்தால் முன்னைய கொடை அது செல்லாது.

நடைமுறையில் வயோதிப பெற்றோர்களே தமது குழந்தைகளுக்கு கொடை உறுதியை வழங்குகிறார்கள். பிள்ளைகள் தம்மை கவனிக்கும் என்ற எண்ணத்தினாலேயாகும். ஆயினும் நடைமுறையில் இது நடப்பதில்லை என்று கூற முடியாது விட்டாலும் கொடை கொடுத்த பெற்றோரை தவிக்க விட்டு விட்டு பிள்ளைகள் வெளிநாடு செல்வதால் பெற்றோருக்கு பிள்ளைகளும் இல்லாமலும் இருக்கும் ஒரு நிலை தற்போது நடைபெறுகிறது என்ாதை நடைமுறையில் காணலாம். இதனை அன்பு இன்மை அல்லது நன்றியின்மைகது கீழ் கொண்டு வரலாம்.

ஆனால் பெற்றோர் அப்படி செய்வதை நாம் காணமுடியாமல் இருக்கிறது. பெற்றோரின் மனம் எப்போதும் பிள்ளைகளின் நலனே முக்கியம் எனக் கருதுவதே காரணமாகும்.

xxxxxxx